Reg. M. 2330.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானதரு வாணியைஉள் நாடு.

மலர் ௧௨ | பிரமாதி ஆண்டு சித்திரைத் திங்கள் 1939௵ ஏப்ரல்௴ | இதழ் ௪

திருவாரூரர்

[P. தியாகராஜன், B.A., L.T.]

XIV

சுந்தரர் காட்டிய விந்தைகள்

போதமுண்ட பிள்ளை யென்பு பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மிதப்ப வுய்த்ததோ
வாய் திறந்து முதலை கக்க மகனைநீ யழைத்ததோ
யாது நம்பி யரிது ? நன் றெனக்கியம்ப வேண்டுமே.

—சிவப்பிரகாச அடிகள்

ஆரூரர் வாழ்க்கையில் பல வியப்பைத் தரும் செயல்கள் நிகழ்ந்தன. பல நிகழ்ச்சிகள் இம்மையிலேயே இயற்கைக்கு மாறாக நடந்தன. என்ன காரணம்? முதலாவது ஆரூரர் எல்லாம் வல்ல இறைவனைத் தமது உடல் பொருள் ஆவியாகிய எல்லாமும் என்று துணிந்து தமக்கென

யாதொரு செயலு மிருப்பதாகக் கருதாமல் சிவபெருமா னிடத்தில் பேரன்பு காட்டி அவனிடத்தில் அடைக்கலம் புகுந்தார். சிவபெருமானும் தற்செயலற்று நின்ற ஆரூ ரரைத் தனக்குத் தோழனுக்கிக் கொண்டு அவர் பொருட்டு எல்லாச் செயல்களையும் புரியநேர்ந்தது. அதனால் அச்செயல் கள் இயற்கை வரம்பினைக் கடந்து நின்றன; மக்களுக்கு வியப்பை உண்டாக்கின. இரண்டாவது எந்நேரமும் சிவ பெருமானை நினைத்த வண்ணமாக இருந்து அவருடைய சித்தம் சிவமாகி நின்றபடியால் அவருடைய திருவாய்மொழி கள் தெய்வத் தன்மை பெற்றிருந்தன. இத்தெய்வப் புலவ ருடைய சொற்கள் உடனே பயனை யளிக்கும் ஆற்றல் வாய்ந் தனவாய் இருந்ததனாலும் பற்பல விந்தைகள் காட்டப் பட்டன.

இவ்வியப்புடைய செயல்களை மூன்று வகையாகப் பிரிக் கலாம். (அ) கடவுளே ஆரூரரது அன்பில் ஈடுபட்டுத் தாமாகவே அவருக்கு இரங்கி விளையாட்டாகச் சில நிகழ்த் தினர். (ஆ) சுந்தரர் தமக்கும் பிறர்க்கும் இன்பம் வேண்டி நின்றபோது சிவபெருமான் நிகழும்படிச் செய்தன ஒரு சில. (இ) நம்பிகள் பிறர்மேல் இரக்கங் கொண்டதால் நிகழ்ந்த அருஞ் செயல். இம் மூவகைப் புதுமைகளையும் மற்றைய சைவ நெறித் தலைவர்களிடத்தும் காணலாம். ஆனால் ஆரூரர் வாழ்க்கையில்தான் அவருடைய முன்னறி வின்றியும் அவர் வேண்டிக் கொள்ளாமலும் அவர்பொருட்டு கடவுள் பற்பல விந்தைகளைக் காட்டினார்.

அவைகளில் முதற்கூற்றைச் சேர்ந்தவை சிவபெரு மான் ஆரூரரை முதன் மணத்திலிருந்து தடுத்தாட்கொண் டது போன்ற ஒருசில. ஆரூரர் இப்பிறவியெடுக்குமுன் கைலை யில் சிவபிரானைக் கேட்டுக் கொண்டது, தாம் மண்ணினில் உழலாமல் தடுக்கவேண்டும் என்பது. ஆனால் பிறந்தபின்

ஆரூரர் முற்பிறப்பைச் சற்றும் நினைப்பில் வைத்திருந்ததாகத் தெரியவில்லை. அதனை முற்றிலும் மறந்துதான் இருந்தார். மணம்வந்தபுத்தூரில் மணவறையின் முன்னின்று சிவமறையோனாக வந்த கடவுள் ஆரூரரைத் தம்மடியான் என்று கூறினபோதுகூட ஆரூரருக்கு முன்னைய செய்தி நினைப்பில் வரவில்லை. அங்கு சிவபிரானே அவரை வலிந்து ஆட்கொண்டார். வழக்கத்தில்லாத ஒரு வழக்கமாகிய அந்தணரடிமையை உண்மையென ஆவணங்கொண்டு யாவரும் இறும்பூதெய்த மெய்ப்பித்தார். வெண்ணெய் நல்லூர் கோவிலுக்கு அந்தணர்களை யெல்லாம் அழைத்துக் கொண்டு போகும்போதே தான் முன் விரைந்து சென்று மறைந்து எல்லோரையும் திகைக்கச் செய்தார். அப்பொழுது தான் ஆரூரர் தமது முன்னிலையை உணர்ந்தார். நேரே இவைகளை யெல்லாம் கண்ட மக்கள் என்ன புதுமை என்ன புதுமை என்று பேசிக்கொண்டனர். இவ்வாறு ஆட்கொள்ளப்பட்ட ஆரூரர் திருவதிகையை யடைந்து அதன் எல்லையை மிதிக்க அஞ்சி சித்தவடமடத்தில் ஓர் இரவு தங்கி பள்ளி கொண்டார். சிவபிரான் மீண்டும் கிழமறையவராய் தோன்றினார். யாருங் காணமுடியாதவர் எனப்படும் கடவுள் மறுபடியும் வந்து ஆரூரர் திருமுடியில் தமது திருவடியைப் பலமுறையும் விளையாட்டாகச் சூட்டிப் பின்னும் ஆட்கொண்டார். கடைசியில் இன்னார் என்று என்னைத் தெரியவில்லையா என்று கூறி மறைந்தார். அப்பொழுதுதான் ஆரூரர் உண்மையை உணர்ந்தார். ஆரூரரிடத்தில் காட்டிய அருளின் திறமென்னே! மறுபடியும் ஆட்கொள்ள ஒரு திருவிளையாடலைச் செய்து வியப்பை விளைவித்தார். திருத்தில்லையில் ஆடுங்காட்சியினைக் கண்டுகளித்தபோது "திருவாரூருக்கு வா' என்று வானொலியின் வழியாகத் தெரிவித்தார். அதற்குமுன் ஆரூரருக்குத் திருவாரூருக்குத் தான்

போகவேண்டும் என்ற எண்ணமில்லை. இங்கும் கடவுள் அவருக்குத் தாமாக வழி காட்டியாக நின்றார்.

ஆரூரர் பல திருவிடங்களையும் சுற்றிக்கொண்டு திருக் கூடலையாற்றூரின் அருகே போய்க்கொண் டிருக்கையில் முதுகுன்றத்திற்குப் போக விரும்பினார். அந்நேரம் இறைவன் ஓர் மறையவன் வடிவந் தாங்கி அங்கு நின்றார். ஆரூரர் அவரை நோக்கி "திருமுதுகுன்று எய்த வழியாது" என்றார். மறையவரும் வழி காட்டுபவர்போல் கூடலையாற் றூருக்கு அழைத்துச் சென்று மறைந்தார். ஆரூரர் வியப் படைந்தார். "அண்டர்தம் பெருமான் போந்த அதிசயம் அறியேன்" என ஏங்கிப் பாடினார். பின்பு திருக்கச்சூரை யடைந்தபோது பசியால் மெலிந்தார். அதனை யறிந்து சிவ பிரான் ஒரு மறையவனாகத் தோன்றி அவ்வூரில் சோறு இரந்துகொண்டு வந்து ஆரூரர்க்கு அளித்து மறைந்தார். உடனே வந்தவர் இன்னார் என்று தெரிந்துகொண்டு "கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கென்றுச்சம்போதா வூரூர் திரியக் கண்டால் அடியார் உருகாரே" என்று வருந்தினார். இங்கும் ஆரூரர்வேண்டாமலே சிவபிரான் தானாகவே ஒரு விந்தையை உண்டாக்கினார். கடைசியாக ஆரூரர் திருவஞ்சைக்களத்தப் பன் திருமுன்பு நின்று வணங்கினபோது சிவபெருமான்ஏவ லால் ஆரூரரைக் கைலைக்குஅழைத்துச்செல்ல வெள்ளை யானை வந்தது. அதன்மேல் ஆரூரர் ஏறிக்கொண்டு, கைலை நோக் கிச் சென்றதையும் தேவர்கள் வந்தெதிர் கொண்டதையும், "விண்ணுலகத்தவர் விரும்ப வெள்ளை யானையின்மேல் என் னுடல் காட்டுவித்தான்." "நிலைகெட, விண்ணதிர நிலமெங் குமதிர்ந்தசைய மலையிடை யானையேறி வழியே வருவேன்" என்னும் தொடர்களினின்றும் அறியலாம். இந் நிகழ்ச்சி ஒரு பெரும் விந்தையன்றோ! இம் மண்ணுலகத்தில் கூட் டோடு கைலாயம் சென்றவர் ஆரூரரையும், சேரமானையும்

தவிர யாருமில்லை. அவர்கள் உடலோடு கைலையடைந்தது, சுந்தரர் வேண்டாமலே கடவுளே தாமாகக் காட்டிய அரிய புதுமையாகும்.

இரண்டாவது வகையான விந்தைகள் சுந்தரர் வேண்டு கோள்களை நிறைவேற்றும் பொருட்டுக் கடவுள் நிகழ்ச்செய் தன. இவ்வேண்டுகோள்கள் பெரும்பாலும் பிறர் பொருட்டும் ஒரு சில தம் பொருட்டும் ஆகும். திருவாரூரில்பரவையாரைக் கண்டு பண்டைவினையால் மனமுடைந்து சிவபிரானிடத்தில் அவ்வம்மையாரைத் தந்தருளும்படி இரந்தனர். அவரு டைய மனத்துன்பத்தைப் பொறுக்கமுடியாதவராகி, சிவ பெருமான் அடியார் கூட்டத்தில் மறைந்து நின்று அவர் மணத்தை முடிக்குமாறு பணித்தார். அவர்கள் கடவு ளின் திருவருளை வியந்து ஆரூரருக்கும் பரவையாருக்கும் மணவினையை நடத்தினர். ஒரு மணத்தை விலக்கினவ வரே மற்றொரு மணத்தைச் செய்ய உதவி ஒரு விந்தையைக் காண்பித்தார். பின்பு குண்டையூரில் பெருமானை நோக்கிப் பரவையார் செய்யும் அமுதுபடையலுக்கு நெல்வேண்டின போது அளக்க முடியாத நெற்போரினைத் தந்தருளினார். அவ்வூர்மக்களெல்லாம் அதனைக்கண்டு இறும்பூதுற்றார். அந் நெல்லை ஆரூருக்குக் கொண்டு போகப் போதுமான ஆட்கள் இல்லை; அதனால் திருக்கோளிலிப் பெருமானைக்கண்டு ஆள் வேண்டினார். குறளைகள் வந்து உடனே நெல்லை ஆரூருக்குக் கொண்டு வந்து குவித்தன. ஆரூர் மக்கள் அந்த தெய்வ அருளைக்கண்டு வியப்படைந்தனர்.

அதன் பிறகு திருமுதுகுன்றத்தில் பொன்னைப் பெற்று அதனை முத்தாற்றில் போட்டனர். எதற்காக? தாம் திருவாரூருக்குத் திரும்பியதும் அங்குள்ள குளத்தி னின்றும் எடுத்துக்கொள்ள நினைத்து அப்படிச் செய்தனர். பொது மக்களில் யாராவது இப்படியும் துணிந்து செய்

வாரோ! அப்பரடிகள் "ஆற்றிற்கெடுத்துக் குளத்திற் றேடும் ஆதர்" எனத் தேவாரத்தில் இழித்துக்கூறிய ஒன்றை ஆரூரர் நன்கு படித்தவராயிருந்தும் இவ்வாறு துணிந்தனரே! தாம் செய்ததைப் பின்னால் பரவையாரிடம் சொன்னபோது அந்த அம்மையாரும் நம்பிகளை நகையாட நேர்ந்ததே. அவர் துணிவுக்கு என்ன காரணம்? ஆற்றில் கெடுத்துக் குளத்தில் எடுக்க முடியும் என்ற நம்பிக்கை அவரிடத்தில் குடிகொண்டிருந்தது. அவர் சிவபெருமானோடு இடைவிடாத தொடர்புடையவராக விளங்கினார். தாம் செய்த தெல்லாம் கடவுள் காட்ட தாம் செய்ததாகவே நினைந்தார். ஆரூரர் குளத்தில் இறங்கி பொன்னைத் தேடியபோது கடவுள் அவரை ஆராயவே வெளிப்படுத்தாது தாழ்த்தார். பிறகு பரவையார் தமது தோழரை நகையாடுவதையும் அவர் நாணத்தால் வருந்துவதையும் அறிந்து பொன்னைத் தந்திட்டனர்; எல்லாம் வல்ல இறைவன் செய்தருளிய இந் நிகழ்ச்சியின் புதுமையை என்னென்று உரைப்பது. இது ஆரூரருக்குக் கடவுளிடத்து உள்ள பற்றினையும் அவருக்குக் கடவுள் எதையும் செய்ய முன்னிற்பதையும் மற்றோர் அறிந் திடற்காகச் செய்தது. திருப்புகலூரில் அடியார்களுக்கு விருந்தளிக்க வேண்டிப் பொன்னையிரந்து பாடினார். அன்று செங்கற்களைத் தலையணையாக வைத்துக் கொண்டு உறங்கு கையில் அவைகள் சிவனருளால் பொன்னாகமாறின. இது வும் இயற்கையைக் கடந்து நின்றதன்றோ! எல்லாவற்றை யும் ஆக்கியவனுக்கு ஒன்றை மற்றொன்றாக மாற்றலரிதில்லை என்பதை இது காட்டுகின்றது.

பின்பு சேரமான் பெருமானோடு மலைநாட்டிற்குச் செல்லும் வழியில் திருவையாறனைக் காண விரும்பினார். ஆனால் காவிரி இருகரையும் புரண்டுபோனதால் வருந்தி இக்கரையிலிருந்தபடியே "அரவந்திரைக் காவிரிக்கோட்

டத்தையாறுடைய அடிகளோ" என்று ஆரூரர் பசுவை நினைந்தழு கன்றெனக் கதறினார். உடனே சிவபெருமான் ஒரு விந்தையை விளைவித்தார். பெருத்த அலைகளோடு புரண்டு விரைந்து ஓடும் வெள்ளம் முன்புறம் தேங்கி மடங்கி சுவர் போல நின்றவிடவும் பின்னுள்ள நீர்ப்பெருக்கு அறவடிந்து விடவும் நடுவே வழியுண்டாயிற்று. இருவரும் ஆற்றைக் கடந்து அக்கரை சென்று ஐயாறனைப் போற்றினர். அவர்கள் மீண்டும் இக்கரை வரும் வரையில் காவிரிநீர் அப்படியே நின்றது. உலகை அழிக்க ஒழுகிய கங்கையைச் சடையில் கரந்த ஒருவருக்கு இது பெரியதொரு அருஞ்செயலாகுமா? அவ்விந்தையைச் சுந்தரர் பெருமையைச் சேரமானுக்கு நன்கு எடுத்துக்காட்ட நிகழ்த்தியதுபோலத் தோன்றுகிறது.

சிலவிடங்களில் ஆரூரர் தம் பொருட்டே கடவுளை வேண்டுவதனால் சில புதுமைகள் காட்டப்பட்டன. நாகைப் பட்டினத்தில் ஆரூரர் சிவபெருமானை அணி ஆடைகள் தந்தருளும்படிப் பாடினார். முத்தாரம், பூணாரம், வயிரக் கோவை, கத்தூரி, கமழ்சாந்து, பொற்பூ, ஒண்பட்டு முதலிய பலவும் தமக்கு வேண்டுமெனத் தெரிவித்துக்கொண்டார். பிரானும் அப்படியே அவர் கேட்டதை யருளினார். இந்நாளில் கோவில்களில் அமைக்கப்பெற்ற திருவடிவத்தை வணங்கி இவ்வித பரிசல்களைப் பெறமுடியுமா என்பார்கள். முடியவேண்டுமானால் ஆரூரருக்கு உள்ள உறுதியான நம்பிக்கை வேண்டும். அவருக்கு இருந்த உறுதியும் நம்பிக்கையும் முடியாது என நினைக்கக்கூடியவைகளை யெல்லாம் முடியும்படி செய்தன.

இனி, தெய்வத்தன்மை வாய்ந்த செயல்களில் சங்கிலியாரின் திருமணமும் ஒன்று. ஆரூரர் அவ்வம்மையாரைக் கண்டதும் மனதை நெகிழவிட்டு அவரையும் மணக்க விரும்பினார். தந்தோழனரிடத்தில் தான் முதல்முதல் அதைத் தெரி

வித்தார். சிவபெருமான் என்ன செய்வார். அன்பர்கள் பணியைச் செய்வதே அருளாளனுக்குத் தொழிலாயிற்றே. அவ்வம்மையார் கனவில் உணர்த்துவானாகத் தோன்றி, இருவருக்கும் மணஉடம்படிக்கையை ஏற்படுத்தினார். மகிழ்க்கீழே ஆரூரருக்குத் தெரியாமலேயே இருந்து அவரை ஒரு சூளுரையில் சிக்கவைத்து மகிழ்ந்தார். அச்சூளுரையை மீறினபோது நம்பிகளது பார்வையைப் பறித்துக் கொண்டார். ஆனால் ஆரூரர் அஞ்சுவாரா? எப்படியும் சிவபெருமான் தம் அன்பு வலையில் சிக்கிக்கொள்வார் என்பது அவருக்குத் தெரியும். விடாது அழைத்தார். "அழைப்பொழியான்!" என்று கண்ட பெருமான் ஊன்றுகோல் தந்திட்டார் முதலில்; பின்பு இடக்கண்ணை யளித்தார்; ஆரூரர் தியாகனைக் காண ஒரு கண் போதுமோ என்று சுட்டலும் வலக்கண்ணையும் அருளினார். என்ன மருத்துவம் பாருங்கள்! திருவாரூரர் கண் பார்வை கெட்டவுடன் கண்மருத்துவரிடம் செல்லவில்லை. மருந்துகளைப் பிழிந்து விடவில்லை. மூன்று கண்ணுடையானாகிய மருத்துவர்களுக்கெல்லாம் மேலான மருத்துவத் தலைவனை வேண்டினார். தாம் விரும்பிய பார்வையைப் பெற்றார். புதுமையான கண் மருத்துவம்! பொதுமக்கள் இதனைக் கையாண்டு பார்ப்பார்களாக.

சுந்தரர் பிறர்பொருட்டு மாத்திரம் தம் அன்பு துணையாக நிகழ்த்திய அருஞ்செயல் மூன்றாவதுகூறில் அடங்கும். அப்படிப்பட்டது ஒரே ஒரு நிகழ்ச்சிதான் அவருடைய வரலாற்றில் காணப்படுகிறது. அதுதான் "வாய்திறந்து முதலை கக்க மகனை அழைத்த" பேருஞ் செயல். அது விந்தைகளுக்குள் விந்தை யெனலாம்.

சில ஆண்டுகளுக்கு முன்னே திருப்புக்கொளியூர்க் குளத்தில் இரண்டு சிறுவர்கள் குளிக்கச் சென்றனர். ஒருவனை முதலை விழுங்கிவிட்டது. ஆரூரர் அங்குசென்ற

நேரம் மற்றைய பையனுக்குப் பூணூல் போட்டார்கள். அந்த விழாவைப் பார்த்த முதலைவிழுங்கினபிள்ளையின் தாயார் தன் பிள்ளை உயிரோடு இருந்திருந்தால் அவனுக்கும் பூணூல் போடலாமே என்று நினைந்து ஓவென்று அழுதார். அத்தெரு வழியே சென்ற திருவாரூரர் ஒரு வீட்டில் மண வொலியும் மற்றொரு வீட்டில் இழவொலியும் கேட்க நேர்ந் தது என்ன காரணம் என்று வினவினார். வரலாற்றை அறிந்தார். நம்பிகள் வந்திருக்கும் செய்தி கேட்டு பிள்ளை யிழந்த பெற்றோரும் வந்து அவரை வணங்கினார். ஆரூர ருக்கு அகம் உருகிற்று. சிவபெருமானைக்கூடக் காணச் செல்லவில்லை. அக்குளம் இருக்குமிடத்தைக் கேட்டுத் தெரிந்து அங்கு சென்றார். அது வறண்டு கிடந்தது. ஆனாலும் முதலை விழுங்கிய பிள்ளையை மீட்டுத்தர உறுதி கொண்டு விட்டார். தமது தோழனார் தமக்குத் துணை செய்வார் என்ற துணிவு அவருக்கு உண்டு. அவரை வேண் டிப் பாடினார். "அவிநாசியே பற்றாக வாழ்வேன் பசு பதியே - வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாணி நீ ஒழிவதழகோ சொல்லாய்? அருளாங்கு சடையானே" "குளத்திடையிழியாக் குளித்தமாணியெனைக்கிறிசெய்ததே?" என்று தாம் கடவுளையே பற்றாக வாழ்வதையும் அவர் எல்லா உயிர்க்கும் தலைவன் என்பதையும் "பேரருளாளன்" என்றும் அவர் இரக்கங்காட்டுந் தன்மையர் என்றும் குறித்து இவ்வித பெருந்தன்மை வாய்ந்த பெருமான் ஒரு குற்றமு மறியாத, குளத்தில் குளிக்க இறங்கிய மாணியை, ஒழித் திடுதல் அழகல்லவே என்று முறையிட்டனர். ஆரூரர்பாடப் பாட குளத்தில் நீர் சுரந்து நிறையத் தொடங்கிற்று. பின் னும் பாடுவாரானார். "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்

சொல்லு காலனையே" "குளத்திடை உள்ளாடப்புக்க மாணியெனைக்கிறி செய்ததே" என்று விழுங்கின முதலையைப் பிள்ளையைக் கக்கச் செய்ய வேண்டும் என்றும், யாதொரு குற்றமுஞ் செய்யாத அப்பிள்ளையின் உயிரை எமன் கொண்டு போனது நோன்றாதலால் அவனை மீட்டு அப் பிள்ளை உயிரைக் கொண்டுவரச் செய்ய வேண்டும் என்றும் தொழுதார். அன்புவடிவான அடியார் திருவாய் மொழிக்கு அளவற்ற ஆற்றல் உண்டு என்பது உலகறியும்படி வறண்ட குளத்தில் நீருண்டாக்கி என்றோ இறந்துபோன முதலையை யும் மீட்டு, அதன்வாயினின்றும் உயிரும் உடலும் காணு திருந்தவிடத்தில் அப்பிள்ளையையும் வெளிப்படுத்தினார். மக்களெல்லாம் என்றும் நிகழ்ந்திராத விந்தையைக் கண்டு திகைத்தனர்; பெற்றோர் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார். அடியார்கள் இறைவனின் திருவருளைப்போற்றினர். இதைப் போன்ற அருஞ்செயல் ஞானசம்பந்தப் பெருந்தகை எலும் பைப் பெண்ணாக்கியது தான். ஆனால் அவரைப்பின் பற்றிய ஆரூரர் அவ்வெலும்புகூடத் துணையில்லாதிருந்தும் ஒரு வடி வத்தை உயிரோடு கூடியதாக உண்டாக்கினார். அளவிடாப் புதுமையிதுவன்றோ! ஆக்கும் வன்மை பெற்றவர் என் பதைச் சிவபிரான் மக்களுக்கு இங்கு எடுத்துக் காட்டினார். ஆரூரர் திருவடிவெல்க.

வாகீச முனிவர் அருளிய

ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும்

[திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள்]

அகவல் 12

காரியம் காசினியாதி, ஏரியல்
ஈசன் கத்தா ; இவற்(கு) இதுபோகம்
ஆதல் செல்லா(து); அகன்(று) உயர்கருமம்
தானே நுகர்தல் செல்லா(து); ஆனு(து)
என்னை செய்த(து) என்னின், அன்றே !
கொன்னே செய்யான் ; தன் நேர் இல்லோன் ;
பாரிசேட மதனிற் பானுக்(கு)
ஏரியல் பான் பசு என்(று) அறிஇனிதே.

இது, பிரபஞ்சம் காரியமாதலின், பாரிசேடத்தால், ஆன்மாவின் பொருட்டு எனப் பசுவுண்மை பின்னும் கூறப்பட்டது.

குறிப்பு :—பாரிசேடம் என்பது அளவை வகைகளுள் ஒன்று ; இதனை ஒழிபளவை என்றும் கூறுவர். மூவர் இருந்த இடத்திலே ஒரு பொருளைச் சிலர் இஃது யார் பொருள் என வினவின், அம்மூவருள் இருவர் அறியோம் என்பாராயின், ஒழிந்தவன் அறிந்தானும் தன்மை பெறப்படும். இதுவே பாரிசேட அனுமானம் எனப்படும். "தத்தம் பகாப்பதங்களே பகுதியாகும்" (நன். சூ. 134) என்ப

தன் விருத்தியுரையுள், "பகுபதத்துட் பகுதி விகுதி முதலிய வுறுப்பெல்லாம் பகாப்பதமாயினும், விகுதி முதலியவற்றை மேல்விதந்து கூறலின், ஈண்டுத் தத்தம் பகாப்பதங்கள் என்றது முதனிலைகளையே என்பது பாரிசேடத்தாற் பெற்றாம்" என்றும், "இனி, இருதிற னறிவுளது இரண்டலா ஆன்மா" என்ற சிவஞானபோத வேழாம் சூத்திரத்து மூன்றும் அதிகரணத்தின் தோற்றுவாயில், அதிகரண வினையுகூறப்புகுந்தவர், "சத்தும் அசத்தும் தம்முள் ஒன்றனை யொன்று அறியுமாறில்லையெனச் சாதித்த வழி, இரண்டும் இவ்வாறாயின், இவற்றை அறியும் பொருள் வேறு என்னை யென்னும் ஆசங்கையை நீக்கிப் பாரிசேட வளவையால் சதசத்தாகிய ஆன்மாவின் இயல்பை வரைசெய்து உணர்த்துதற்கு எழுந்தது மூன்றும் அதிகரணம்" என்னும் ஆசிரியர் சிவஞானயோகிகள் இவ்வளவையினை எடுத்து ஆண்டிருக்குமாறு காண்க.

உரை முடிவு :—காசினியாதி காரியம் ; கத்தா ஈசன் ; இவற்கு இது போகமாதல் செல்லாது ; கருமந்தா நுகர்தல் செல்லாது ; செய்தது என்னையெனின், அன்றே, தன்னேர் இல்லோன், கொன்னே செய்யான் ; பாரிசேடம் மதனிற் பானுக்கு (செய்தது) என்றும், பரமன் பசு என்றும் இனிது அறி என்பது.

உரை :—நிலம் முதலாகிய பிரபஞ்சம் காரியப் பொருளேயாகும் ; இதற்கு முதல்வன் அழகிய இயல்பினை யுடைய ஈசனுவான் ; ஆனல், இவனுக்கு இதுபோகப் பொருளாகமாட்டாது ; விரிந்துயர்ந்து காரியப் பொருளாகிய இப்பிரபஞ்சந் தானும் தானே தனக்குப் போகப்பொருளாதலும் இல்லையாம் ; ஆகவே, அவன் வறிதே அமைந்தொழியாது, கோன்னே இதனைச் செய்தது எதன் பொருட்டு எனின், அந்தோ ! ஒப்பற்றவனுகிய அப்பரமன் ஒன்றை

யும் கொன்னே (வீணாக) செய்வது இலன். எனவே, இக் காரியப் பிரபஞ்சம் தனக்கும் பயன்படாது, தன்னைக் காரியப் படுத்திய பதிக்கும் பயன்படாது என்பதாகும். ஆகவே, பாரிசேட வளவையால், இதனையவன் படைத்தது, பாணாகிய ஆன்மாவின் பொருட்டென்றும், பாணாவான் பசு என்றும் நன்றாக அறிவாயாக,

நில முதலாக நாதம் ஈறாகநின்ற தேகாதி பிரபஞ்சமெல்லாம் அடங்கக் காசினியாதி (1) யென்றும், தோற்றக்கேடுகள் உடைமையின் காரியம் (1) என்றும் கூறினார். "புவம் வளி கனல் புனல் புவி கலை யுரைமறை திரிகுண மமர்நெறி, திவ மலிதரு சுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யவைதம, பவமலி தொழிலது நினைவொடு பதும நன்மலரது மருவிய சிவன்" என்றும், "பழுதில்கடல் புடைதழுவிய படிமுதலிய உலகுகள் மலி, குழுவிய சுரர் பிறர்மனிதர்கள் குலமலி தரு முயிரவையவை, முழுவது மழிவகை நினைவொடு முதலுருவியல் பரன்" என்றும் வரும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்காலும் துணியப்படும்.

காசினியாதி பிரபஞ்சத்தைக் காரியம் என்றதனால், இதற்கு முதற் காரணம் மாயையென்றும், துணைக்காரணம் சிவனது சக்தி என்றும், நிமித்த காரணமாகிய வினைமுதல் சிவனே என்றும் கொள்ளப்படும்; "காரிய காரணங்கள் முதல்துணைநிமித்தம், கண்டாம். பாரில்மண் திரிகைபண்ணு மவன் முதல்துணை நிமித்தம் தேரின்மண்மாயையாகத் திரிகை தன்சத்தியாக, ஆரியன் குலாலனையநின் றாக்குவன் அகிலமெல்லாம்" (1 : 18) எனவரும் சிவஞான சித்தித் திருவிருத்தம் காண்க. இவ்வகையால் எய்தப்படும் கருத்தனாகிய சிவனை, கர்த்தா ஏரியல் ஈசன் என எடுத்துமொழிந்ததனால், ஈசன் இதனைச் செய்வது தன்பொருட்டன்றி ஆன்மாவின் பொருட்டா மென்னும் அவனது அளப்பரும் கரு

னைத்திறம் தெருட்டியவாறும். "அரணமில் கூற்றின், முரண்தொலை யொருவனும் முரியாச் சத்தியின், அண்டரண்ட மற்றெண்டால் இடைவ, செய்தக் கண்ணும் செயவிலன்" (ஞா. 63) எனப் பிறண்டும் ஆசிரியர் தெளிவிக்குமாறு அறிக. தொழில்மிக்கு நின்று காசினியாதி பிரபஞ்சத்தைக் காரியப்படுத்தும் இயைபு குறித்துப் பரமனை, ஏரியல் ஈசன் என்றார், மகேசன் என்பது பொருள். கத்தா வடசொற் சிதைவு.

காரியப்பட்ட பிரபஞ்சம் அவன்பொருட்டு ஆகாமையினை வற்புறுத்தப் புகுகின்றாராகலின், இவற்கு இது போகமாதல் செல்லாது (2 - 3) என்றார். ஏரியல் ஈசன் என விசேடித்த சிறப்பினால், இஃது உணரப்படினும், உய்த்துணர்வது சொல்லில் வழியென்னும் முறைமை கருதி இதனைக் கூறலாயினர். போகமாகிய வழி, முதல்வன் நிர்விகாரி என்பது கூடாமையின் போகமாதல் செல்லாது எனப்பட்டது. ஆதல் செல்லாது. நுகர்தல் செல்லாது என்பன ஒரு சொல்; "போதல் செல்லா வுள்ளமொடு புலந்து" என்றாற்போல. அளவிறந்த பரப்பும் பலவாகிய அண்டங்களும் உடைமையின் இப்பிரபஞ்சத்தை, "அகன்றயர் கருமம் (3) என்றார். கருமம் செய்யப்படு பொருள்; இது வடமொழிச் சிதைவென்றும், "செய்யப்படு பொருளை அவர் (வட நூலார்) கருமம் என்று வழங்குப" என்றும் ஆசிரியர் தெய்வச் சிலையார் கூறினர். தானே, ஓகாரம் தெரிநிலை. இப்பிரபஞ்சம் அசத்தாகலின், அது தானும் போக நுகர்தல் இல்லையாகலின், தானே நுகர்தல் செல்லாது (4) என்றார். எனவே, பிரபஞ்சம் காரியப்பட்டது. பதியாகிய ஈசனுக்காதல், பாசமாகிய பிரபஞ்சத்துக்கேயாதல் இன்று என்பதாம். எனவே, ஒழிந்து நின்ற பசுவிற்குப்

போகமாவதாம் என்பது போதருதலால், அதனைக் கடா விடைகளால் எய்துவிக்கின்றார்.

"ஆறுது என்னை செய்தது என்னின்" (4-5) என்பது கடா. இப்பிரபஞ்சமாகிய காரியப்பொருளைத் தனக்காவது, அப்பொருட்கேயாவது பயன்படுமாறின்றி முதல்வன் செய்தான் எனின், அச்செயல் பயனில் செயலாமென்று ஒழிதல் செய்யாது, அதனைச் செய்தல் கூடாதன்றோ என்பான், மாணாக்கன், ஆறுது என்னை செய்தது என்றான். பயனில் செயல் செய்தல் முதல்வன்பால் எஞ்ஞான்றும் இன்மையின் அப்பயனை உணரமாட்டாமையால் மாணவன் அவ்வாறு கடாவினான் எனக் கொண்ட ஆசிரியர், அச்சொல் முதல்வன் பால் அபராதம் விளைப்பது குறித்தும், மாணவனது அறியாமை குறித்தும் இரங்கிக் கூறுகின்றாராகலின், அன்றோ (5) என்றார். சுவாமி விவேகாநந்தரை, ஆங்கிலம் வல்ல ஒருவர் கண்டு, "ஆங்கிலக் கலையறிவு மிகச் சீரியதன்றோ" என்று வினவினாராக, அவர்க்கு, சுவாமிகள், "What a stupid fool you are!" என்று முதற்கண் கடிந்து கூறி, பின்னர், அவரது மனப்பயிற்சியைத் தேர்ந்து, அதற்காக அவர்பால் இரக்கங்கொண்டு, "but what is the use of blaming you when that seems to be the prevailing way of thinking!" என்று மொழிந்து, தம் மனத்தே நமது நாட்டுக் கற்றவர் மனநிலையைப்பெரிதும் நினைந்து, also, to such a state is our country reduced!!" என்று மாழ்கினார் என அவரது வரலாறு கூறுகின்றது. இதனால் ஆசிரியப்பெருமக்களின் அருணிலை இனிது புலனாகும். பயனில் செயல் புரிதல் முதல்வனுக்கு ஒருகாலும் இன்மை யென்பது வற்புறுப்பார் "கோன்னே செய்யான்" (6) என்றும், பிறர்செயலுள் பயனில்லன உளவாதல் இயல்பாதலின், முதல்வன் நிகரற நிற்கும் ஒரு

வணையினன் என்பார், "தன் நேர் இல்லோன் என்றும் கூறினார்.

இவ்வாறு, பதிக்கும் உலகிற்கும் போகமாகாதெனவே இது பசுவிற்கு ஆம் என்பது பாரிசேட அளவையால்பெறப் படுதலின், பாரிசேடமதனிற் பரனுக்கு என அறி என்றார். பரனாவான் இயல்பாகவே பாசங்களின் நீங்கி முற்று முணர்தலும் முடிவிலாற்றலுமுடைய பதிப்பொருளேயாயினும் ஈண்டுப் பரன் என்பது பசுவாகிய ஆன்மாவையென்பார், ஏரியில் பரன் பசு என்று அறி இனிதே என்றார். பதிப்பொருளை நோக்கக் காசினியாதி பிரபஞ்சம் அபரமாக நிற்றலின், அதனை நுகராத பதிப்பொருளே போல் தானும் நில்லாது, அதனை நுகர்தலின் பரமாதல் பசுவுக்கு இல்லையென்பது எய்துமன்றோ? அதனை விலக்கி, பதிஞானத்தாலும் பாசஞானத்தாலும் அவ்வப்பொருளோடு சார்ந்து சார்ந்ததன் வண்ணமாய்த் திகழ்தல்பற்றிப் பசு பரமென்றும், அபரமென்றும் உணரப்படுமாயினும் உண்மை நெறியே நோக்கியவழி, பரமென்றே துணியப்படும் என்பார் ஏரியல் பரன் என்றார்.

இதுகாறும் கூறியது காசினியாதி பிரபஞ்சம். பதிப்பொருட்காதல், பாசமாகிய தனக்காதல் இன்றி, பசுப்பொருட்காகவே என்றும் இதனை நுகருமுகத்தால், பசு தன் பசுத்துவம் நீங்கி வீடுபெறவேண்டுமென்பது முதற்பொருளின் திருவுள்ளமென்றும் உணரப்படும் என்பதாம்.

பச்சை மண்ணும் சுட்ட மண்ணும்*

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

பச்சை மண்ணுக்கும் சுட்ட மண்ணுக்கும் உள்ள வேற்றுமை இன்னதென்பதைப் பொதுவாக நாம் அறிவோம். ஆனால் நுட்பமாகக் கவனித்து ஆராய்ந்து பார்த்தவர்கள் நம்மில் ஆயிரத்தில் ஒருவர்கூட இருக்கமாட்டார் என்று எண்ணுகிறேன். பச்சை மண்ணைக் களிமண் சேற்று மண் புழுதிமண் முதலிய பலவகையாகக் காணலாம். சுட்ட மண்ணைப் பானை, சட்டி, செங்கல், ஓடு முதலிய பலவற்றிற் காணலாம். பச்சை மண்ணுக்கும் சுட்ட மண்ணுக்கும் உள்ள சிறந்த ஒரு வித்தியாசத்தை மனிதன் மிக மிகத் தாழ்ந்த நாகரிக நிலையிலிருந்தபோதே அறிந்துகொண்டான். அறிந்து கொண்ட பிறகு, அவ்வறிவைப் பயன்படுத்திப் பச்சை மண்ணைச் சுட்டுப் பானை சட்டி செங்கல் ஓடு முதலியன செய்து, சமையலுக்கும் வீடுகட்டுவதற்கும் உபயோகித்தான்.

பச்சை மண்ணை ஏன் சுடவேண்டும்? தண்ணீரால் ஏற்படும் தொந்தரவை நீக்குதற்குச் சுடவேண்டும். தண்ணீர் என்ன தொந்தரவைத் தருகிறது? பச்சை மண்ணின்மேல் தண்ணீர்பட்டால் மண் கரைந்து விடுகிறது. பச்சை மண்ணினால் செய்து சுடப்படாத ஒரு சட்டியில் தண்ணீரை வைத்தால் உடனே சட்டி கரைந்து ஒடிந்து போகிறது. பச்சை மண்ணினாலாகிய கல்லின்மேல் மழைத்துளி விழுந்தால் கல் கரைந்து போகிறது. பச்சைக் கற்களால் ஒரு சுவர் கட்டப்பட்டால் அது மழையில் நனைந்து கரைந்து இடிந்துவிடும். தண்ணீரிற் கரையாமல் காப்பாற்றுவதற்காகவே குயவன் பானை சட்டிகளைச் சூளையில் வைத்துச் சுட்டு வேக வைத்தெடுக்கிறான். வீடு கட்டுபவர்களும் செங்கல் ஓடு முதலியவற்றைச் சூளையிலிட்டு நன்றாகச் சுட்டெடுக்கிறார்கள்.

---

* இது 24-3-39-ல் வாலாஜாபேட்டையிலும், 1-4-39-ல் காஞ்சிபுரத்திலும் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

பச்சை மண்ணைச் சுடுவதால் தண்ணீரின் தொந்தரவு எப்படி நீங்குகிறது? இக்கேள்விக்குச் சரியான பதில் சொல்லாது நம்மிற் பலர் விழிக்க நேரிடும். பதில் சொல்லச் சிறிது அறிவியலாராய்ச்சி வேண்டும். பச்சை மண்ணில் நீர், வாயு முதலிய பிறபொருள்கள் தங்குவதற்கான இடைவெளி (pores) நிரம்பவுண்டு. அவ்விடை வெளியில் நாம் சுவாசிக்கும் காற்று (atmosphere) தங்கியிருக்கும். பச்சை மண்ணைத் தண்ணீர்விட்டுப் பிசைந்து பானை சட்டிகளாக்கும்போது, அப்பானை சட்டிகளில் பச்சைமண்ணும் இடவெளிகளில் தண்ணீரும் காற்றுமிருக்கும். அவற்றை வெயிலிற் காயவைத்த பிறகு தண்ணீர் வறண்டு காற்றே இடைவெளிகளை நிரப்பியிருக்கும். வெயிலிற் காய்ந்த சட்டியில் தண்ணீரை விட்டால் இடை வெளியிலுள்ள காற்று தண்ணீரால் துரத்தப்பட்டுத் தண்ணீருக்கு இடங்கொடுக்கும். தண்ணீர்மிகுதியால் சட்டியின் உருவழிந்து பழையபடி பச்சைமண் கரைந்து ஈரவுருண்டையாகிவிடும். பிள்ளையார் சதுர்த்தி கழிந்தவுடன் பச்சை மண்ணாற்செய்யப்பட்ட பிள்ளையார் உருவங்களைக் குளம் கிணறு ஆறு முதலிய நீர்நிலைகளிற் சேர்ப்பிக்கும்போதும் நிகழ்வது இஃதேயாகும். பச்சைமண்ணை நெருப்பிலிட்டு வேகவைக்கும்போது இடைவெளிகளிலுள்ள நீர், காற்று முதலியன துரத்தப்பட்டு மட்பகுதியே இடைவெளியை நிரப்பிவிடும். தீயின்குணம் சுட்டு ஒன்றுவித்தல் என்பதைப் பல தத்துவக் கட்டளை நூல்களிற் படித்தறிந்திருக்கிறோம். நன்றாகச் சுட்டு வேகவைக்கப்பெற்ற பானை சட்டி செங்கல் ஓடு முதலியவை தண்ணீரினாலாகிய தொந்தரவிலிருந்து விடுபடுகின்றன. அவற்றைக் குளத்திலேயே எத்தனை நாள் ஆழ முழுக்கிவைத்திருந்தாலும் அவை பச்சை மண்ணாக இருந்தபோது கரைந்து ஒடிந்ததுபோல் ஒடிவதில்லை. இதற்குக் காரணம் இடைவெளி (pores) யின்றி நெருங்கி ஒன்றுபட்டு உறவாடியிருத்தலேயாம்.

பச்சைமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டி உறவாடுவதில்லை. ஏன்? தன்மை மாறிவிட்டபடியால் சுட்டமண்

மிகக்கடினமாகி வேற்றுப்பொருள்களுக்கு இடைவெளியில் இடங்கொடாதபடியால் பச்சைமண்ணைப்போல் பிசைந்து ஒன்றாகக்கூடிய நிலைமையிலில்லை. சுட்டமண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாதென்ற உண்மையே மக்கள் பழைய நாகரி கத்தை நமக்குப் புலப்படுத்த உதவுகிறது. அது எப்படி? மோஹஞ்சோடாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில் பூமியை அகழ்ந்து பார்க்கும்போது 25 அடி, 50 அடி ஆழத் தில் பழைய கட்டிடங்களின் கல்வரிசைகள், பானையோடுகள், மட்கலப்பகுதிகள் முதலியன கிடைக்கின்றன. சுட்டமண் பச்சைமண்ணோடு கலந்து ஒன்றாகியிருப்பின், இவை நிலத் தில் மண்ணோடு மண்ணாகிச் செங்கற் பானையோடு முதலி யனவாகக் காணப்படாமல் பழைய நாகரிகத்தை அறிவிக்கும் கருவிகளாக இராமற் போயிருக்கும்.

பச்சைமண்ணுக்கும் சுட்ட மண்ணுக்குமுள்ள வித்தி யாசத்தை நமது தமிழ்நாடு நன்கறிந்து அன்றாட வாழ்க்கை யிலும் பழமொழியாகப் பயன்படுத்துகிறது. ஏழையும் செல்வனும் ஒன்று சேராததையும், யோக்கியனும் அயோக்கியனும் ஒன்று சேராததையும் குறிக்கும்போது நம் மக்கள் "பச்சைமண்ணும் சுட்டமண்ணும் ஒன்று சேருமா?" என்று கூறுகிறார்கள். இத்தகைய உவமை தமிழ் நூல்களிற் பலவிடத்திற் பல சந்தர்ப்பங்களில் வருகி றது. அவற்றுள் சைவத்திருமுறைகளுள் திருவிசைப்பாவில் கருவூர்த்தேவர் என்ற சைவப் பெரியார் பச்சைமண் தண்ணீ ரிற் கரைவதையும் சுட்டமண் கரையாததையும் உவமித்துச் சிறந்த பல தத்துவ உண்மைகளைப் போதிப்பதைக் கண்டு மகிழ்வோமாக. திருவிடை மருதூர் திருவிசைப்பாவில் ஏழாவது பாடல் கீழ் வருவதாகும்:—

ஏழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்துளி படநனைந் துருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்
காதனேன் மாதரார் கலவித்

தொழிலையாழ் நெஞ்சம் இடர்படா வண்ணம்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்தகம் புகுந்தோன்
மருவிடம் திருவிடை மருதே.

இப்பாடலில் கருவூர்த்தேவர் பச்சை மட்கலத்தைச் சிற்றின்பத்தி லீடுபட்டுள்ள நெஞ்சுக்கும், சுட்ட மட்கலத்தைப் பேரின்பத்திலீடுபட்டுள்ள நெஞ்சத்துக்கும் உவமிக்கும் அழகை நோக்குக. திருமுகத்தலை திருவிசைப்பாவில் ஆறாவது பாடலில்,

"புனல்பட உருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்துயி ரளிக்கும்
வினைபடு நிறைபோல் நிறைந்தவே தகத்தென்
மனம்நெக மகிழ்ந்தபே ரொளியே"

என்றும், மேற்கூறிய "எழிலையாழ் செய்கை" என்ற பாடலுக் கடுத்த பாடலில்,

"வெய்யவாம் செந்தீப்பட்ட இட்டிகைபோல்"

என்றும் இப்பச்சைமண் சுட்டமண் உவமையைப் பயன் படுத்தும் சிறப்பைக்கண்டு மகிழ்வோமாக. இத்தகைய பல அரிய உவமைகட்குப் பெருங் களஞ்சியமாகவுள்ள திருவிசைப் பாவாகிய ஒன்பதாந் திருமுறையை நாடோறும் பயின்று நன்மை பெறுவோமாக.

பச்சைமண் பல இடைவெளிகளைத் (pores) தன்னுள்ளடக்கிக் காற்று தண்ணீர் முதலியவற்றுக்கிடங் கொடுப்பதுபோல, சிற்றின்பத்திலீடுபட்ட நெஞ்சம் தனக்கு இடர் விளைக்கும் பொருள்களுக்கு இடந்தருகின்றது. தண்ணீரிற் கரையும் பச்சைமண் போலச் சிற்றின்ப நெஞ்சமும் விஷய சுகதுக்கங்களாற் கலக்குண்டு கரைகிறது. கனலில் வேகவைக்கப் பெற்ற சுட்ட மட்கலம் தண்ணீரிலேயே கிடந்து, தண்ணீருக்குக் கொள்கலனாகி உயிர்கட்கு இன்பந்தருகிறது. இறைவன் திருவருளாகிய கனலில் வேகவைக்கப்பெற்ற நன்னெஞ்சம் உலக விஷய சுகதுக்கங்களை யனுபவிக்கும்போது அவற்றாற் கலக்கமடைவதில்லை. இல்லறத்திலிருந்தபோதி

லும் " அரிவையரோடிருப்பினும் அகப்பற்றற்றிருப்பர் " என்ற நிலையே திருவருள் நெறிநிற்போர் நிலையாகும். சாருந் தவத்துச் சங்கிலி நாச்சியாரும் மேருவரையின் மேம்பட்ட தவத்தராகிய நம்பியாரூராரும் நடத்தியஇல்லறமே இதற்குச் சான்று. அதோடு நில்லாது பிறவுயிர்கட்கும் இன்பம் நல்கும் பேராற்றலையும் பெறுகின்றது. நம்பியாரூரர் பிறவுயிர்கட்குச் செய்த பேருபகாரத்தைப் பெரிய புராணம் விரித்துக் கூறு கிறது. அதைச் சைவ உலகம் என்றும் மறத்தலாகாது. நாமும் பச்சைமண் நிலையிலிருந்து சுட்டமண் நிலைக்குச் செல்ல இன்றே முயற்சிப்போமாக.

திருவாசகம்

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

திருச்சதகம் - ஆனந்த பரவசம் - 2-வது பாட்டு

பேசப் பட்டே னின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டே னாட்பட் டேனுன் னடியேனே.

பதவுரை :—நின் அடியாரில் பேசப்பட்டேன் - உன்னுடைய அடியார்களில் ஒருவனாக உனது அருள்பெற்ற பெரியார்களால் புகழ்ந்து பேசப்பட்டேன்.

திருநீறே பூசப்பட்டேன் - நான் உனது திருவருளையே நினைந்து கொண்டிருந்து அதற்கறிகுறியாகத் திருநீறே பூசிக் கொண்டிருந்தேன்.

பூதலரால் உன் அடியான் என்று ஏசப்பட்டேன் - உனது அருளை அறியாத பூமியிலுள்ள மக்களால் நான் உனக்கு ஆட்பட்ட அடியானென்று இகழ்ந்து ஏசப்பட்டேன்.

உன் அடியேன் - உனது அடிமையாகிய நான், ஆசைப் பட்டேன் - உலகப்பற்றைவிட்டு உன்னிடத்திலே முற்றும் அன்புடையவனாகி.

ஆட்பட்டேன் - திருப்பெருந்துறையில் அந்தணர் கோலத்தில் வந்த உன்னாலே அடிமையாகக் கொண்டு ஆண்டு அருளப்பெற்றேன்.

இனிப்படுகின்றது - இங்ஙனஞ் செய்திகள் நிகழ்ந் திருத்தலால் இனி உலகில் நான் பொருந்தி வாழ்வது.

அமையாது - தகுதியுடையதாகாது.

விளக்கவுரை :—நின் அடியாரில் பேசப்பட்டேன் - பின்னாலே பூதலரால் உன் அடியானென்று ஏசப்பட்டேன் என்று வருதலால் அதற்கு எதிரிடையாக உமது அடியாரில் ஒருவனாகப் புகழ்ந்து பேசப்பட்டேனென்று பொருள் செய்யப்பட்டது.

திருநீறே பூசப்பட்டேன் - பேசப்பட்டேன் ஏசப்பட்டேன் என்று முன்னும்பின்னும் பாட்டில் வருவதற்கேற்பப் பூசப்பட்டேன் என்று செயற் பாட்டு வினையில் கூறப்பட்டாலும் பிறரால் திருநீறு பூசப்படுதல் அடிகளுக்குப் பொருந்தாத செயலாதலால் நான் திருநீற்றினையே எப்பொழுதும் பூசிக்கொண்டிருந்தேன் என்று பொருள் கூறப்பட்டது.

பூதலரால் ஏசப்பட்டேன் - இது அடிகள் பாண்டியனுடைய அமைச்சர் வேலையை விட்டு நீங்கிச் சிவவேடப் பொலிவுகொண்டு விளங்கினபொழுது உலகத்தார் தம்மை நிந்தித்தலைக் குறிக்கின்றது. இங்ஙனம் தம்மைச் சுற்றத்தாரும் பிறரும் நிந்தித்தலை அடிகள் சில இடங்களில் கூறியுள்ளார் (௩௮௩) திருவருளை அறியாத உலகர் அருட் கோலங் கொண்டிருப்பவர்களை இகழ்தல் இயல்பு.

ஆசைப்பட்டேன் - ஆசை - அன்பு. ஆசைப்பட்டேன் - எச்சப் பொருளில் வந்த வினை முற்று.

ஆட்பட்டேன் - திருப்பெருந் துறையில் அடிகள் சிவ பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றதைக் குறிக்கிறது.

இனி - மேலே சொல்லியவாறு செய்திகள் நிகழ்ந்த காரணத்தால், படுகின்றது - படுதல் - பொருந்தல். இங்கே அது உலகத்தைப் பொருந்தி வாழ்தலைக் குறிக்கிறது.

அமையாது ஆல் - ஆல் - அசை. அமைதல் - செய்யத் தகுதியுடையதாயிருத்தல்.

அடிகள் இந்தப் பாட்டில் உலகைப் பற்றைவிட்டுச் சிவபெருமானிடத்தில் அன்புடையவனாய் அவனால் ஆட்கொள்ளப் பெற்றதால் அவனைப் பிரிந்து உலகத்திலிருந்து வாழ்வது தக்கதாகாதென்று கூறுகின்றார். இது ஆனந்த பரவசத்துக்கு எதிரிடையான செயல். இதனால் அடிகள் ஆனந்த பரவசத்தை விரும்புகின்றாரென்பது கருத்து.

திருச்சதகம் - ஆனந்தத் தழுந்தல். கூ-வது பாட்டு

சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரிலைம் புலன்களான
முந்தை யான கால நின்னை யெய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி மூந்தி லேனை னுள்ளம் வெங்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்ன மெய்த லுற்றி ருப்பனே.

பதவுரை :—ஐயா - தலைவனே.

சிந்தைஆல் - உன்னை மனதிலே தியானஞ் செய்தலாலும்,

செய்கைஆல் - உடலினாலே திருவலகிடுதல் முதலிய சரியைப் பணி செய்தலாலும்,

கேள்விஆல் - என்னுடைய காதுகளினாலே உன்னுடைய புகழைக் கேட்டலினாலும்,

வாக்குஆல் - எனது நாவினால் உன்னுடைய புகழைப் பேசிக் கொண்டிருத்தலாலும்,

சீர்இல் ஐம்புலன்கள் ஆல் - சிறப்பில்லாத ஐம்பொறிகளால் உனது திருமேனியைக் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிதலாலும்,

முந்தைஆன காலம் - திருப்பெருந்துறைக்கு வந்து என்னை ஆண்டருளின காலத்துக்கு முந்தின காலம்,

நின்னை எய்திடாத மூர்க்கனேன் - நின்னுடைய திருவடிகளை அடைந்து பேரின்பம் பெறாத மூடனாகிய நான்.

வெந்து விழுந்திலேன் - உடல் தீயிலே விழுந்துவெந்து இறந்தேனில்லை.

என் உள்ளம் வெள்கி விண்டிலேன் - மனம் நாணி உடல் வெடிக்கவில்லை.

எந்தை ஆயநின்னை - எனது தந்தையாகிய உன்னை.

இன்னம் எய்தல் உற்று இருப்பன் - நின்னை அடைதலை மனதில் நினைத்துக் கொண்டிருப்பன்.

விளக்கவுரை :—சிந்தைஆல் - மனதால் தியானித்தல். இது கிரியைக்கும் யோகத்திற்கு முரியது.

கேள்விஆல் - பதி பசு பாச உண்மைகளைக் கேட்டல் ஆகும் ; இது ஞானத்திற்குரியது.

வாக்குஆல் - பதி பசு பாச உண்மைகளைப் பிறர்க்குச் சொல்லுதலாகும் ; இதுவும் ஞானத்திற்குரியது.

சீர்இல் ஐம்புலன்கள்ஆல் - இது சரியைக்குரிய உருவ வழிபாட்டைக் குறிக்கிறது. ஐம்பொறிகளும் ஆன்மாவுக்குளடங்கி ஒழுகும் மனத்தின் வயப்பட்டு ஒழுகினுலன்றித் தாமாக உலக இன்பத்தின் பொருட்டு ஐம்புலன்கள் வழியே செல்லுதலால் சீரில் ஐம்புலன்கள் என்றார். ஐம்புலன்களென்ற சொல்லோடு வருகிற ஆல் என்ற மூன்றாம் வேற்றுமை உருபை சிந்தை, செய்கை, கேள்வி, வாக்கு, இவற்றோடுஞ் சேர்த்துப் பொருள் உரைக்க. ஐம்புலன்கள் - ஐம்பொறிகள் : ஆகுபெயர். சிந்தை, செய்கை, கேள்வி, வாக்கு, ஐம்புலன்கள் ஆகிய இவை ஐந்தும் இறைவனை அடைதற்கு வழிபாட்டு வகைகளாகக் கூறப்பட்டன. மேலே ௬௦ - வது பாட்டிலும் சிந்தனை காண்டல், வந்தனை, வாக்கு, ஆகிய இவைகள் வழிபாட்டு வகைகளாகக் கூறப்பட்டவை காண்க.

முந்தை ஆனகாலம் - இதில் முற்பிறப்பிலுள்ள காலமும் அடங்கும். எய்தல் உற்று இருப்பன் - உறுதல் - மனதில் நினைத்தல்.

அடிகள் தம்மை ஆட்கொண்ட இறைவனோடு போகாது பிரிந்திருத்தலை நினைந்து எய்தலுற்றிருப்பன் என்றார். தம்மை இறைவன் திருப்பெருந் துறைக்குவந்து ஆட்கொண்டருளியதற்கு முன்னமே சிந்தை கேள்வி முதலியவற்றால் வழிபாடு செய்திருந்தால் அவ்வழிபாட்டின் பயனாக இப்பொழுது அவனுடன் செல்லாதிருத்தற்கு நேர்ந்த பிராரத்துவ மலத்தடையும் மலவாசனைத் தடையும் உண்டாக மாட்டாவென்பதை அடிகள் இப்பாட்டில் குறிப்பாலுணர்த்தியருளினார்.

கடைக்கொண்டிருமின்! திருக்குறிப்பை !!

[மு. ஞானப்பிரகாசம், யாழ்ப்பாணம்]

உலகம் பலவேறு நாடுகளை உடையது. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு துறையில் தலைசிறந்து விளங்குகிறது. ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சியும் அந்த அந்த நாட்டுத் துறையின் வளர்ச்சியிலேயே தங்கி யிருக்கிறது. எம் தமிழ்நாடு அந்த நாள் முதல் இந்த நாள் வரைக்கும் சமயத்துறையிலேயே வளர்ந்து வருகிறது. எமது வளர்ச்சி சமயத்துறையின் வளர்ச்சியைப் பொறுத்ததாகும். அந்தச் சமயத்துறையே எங்கள் வாழ்முதல். அதைப் பறி கொடுத்தல் எம் வாழ்முதலையும் எம்மையும் பறி கொடுத்தலாகும்.

இன்றைக்கு நாடுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவா யிருக்கின்றன. தொடர்பு அன்பை விருத்தி செய்வதாகும். ஆகலின் மிகவும்நல்லது. ஆயினும் ஒவ்வொரு நாடும் தத்தம் வாழ்முதலில் மாத்திரம் கண்ணும் கருத்துமா யிருத்தல் வேண்டும். அதைத் தளரவிடுதல் கூடாது. அந்த வாழ்முதல் தளர்ந்துவிடுமாயின் அந்த நாடு இருந்த இடமே தெரியாமற் போய்விடும்.

தமிழ் நாட்டுப் பெரியீர்! மேல்நாட்டார் நம்முடன் தொடர்புபட்டிருப்பது நாம் செய்த தவப்பயனே. அவர்கள் வியாபாரத்திலும் அரசியல் ஞானத்திலும் பொருளாதார விருத்தியிலும் தலைசிறந்தவர்களன்றோ? அவர்கள் அவை தம்மையே வளர்த்து வருகின்ற பெரியார். வளர்க்குமுகத்தால் அவை தம்மைப் பற்றிய கோடானுகோடி எண்ணங்களை எங்களுக்கும் ஏற்றுமதி செய்கின்றனர். சென்ற 200 ஆண்டுகளாக ஏற்றுமதி செய்தே வருகின்றனர். அவ்வெண்ணங்களோ, எம்முள்ளே புகுந்து எம்முள்ளுக்குள்ளே விளங்கும் எம் வாழ்முதலை மறைத்துக் கொண்டன. மேனாட்டு வியாபாரிகட்கு விளம்பரங்கள் பிரதானமானவை; சங்கங்கள் சிறந்தவை. கிளர்ச்சிகள் பொருத்தமானவை. நாங்களும் இவைதம்மைப் பொருளென மதித்து இவற்றுள் மூழ்கி, அமிழ்ந்து அழுந்துகிறோம். அதனால் எம்வாழ்முதலை, எம்சமய ஞான ஒளியை மறந்து மான மழிகிறோம். "நான் ஆர், என்னுள்ளம் ஆர் ஞானங்கள் ஆர்" என்றென்று நிலை பேறான ஞான விசாரணை செய்த கால மெல்லாம் போய் மின்சாரத்தையும், ஆகாய வசனியையும் பார்த்து 'அதிசயம் கண்டாமே' என்று பாடப்பழகினோம். அவ்வாறு எங்களைப் பழக்கி எடுக்கத் தற்கால உலகம் கங்கணம் கட்டி நிற்கிறது. அன்பர்களே! பழக்கமென்பதே பொல்லாதது. அதுவும் நிலையில்லாத தொன்றை அதிசயமென்று பாவித்துப் பழகுவதென்றால் அதனினும் பொல்லாதது பிறிதொன்றில்லை என்னலாம். பழக்கம் ஒரு வாய்பாடு போன்றது. அந்த வாய்பாடு என்னும் சூழலில், அதுவும் நிலையில்லாப் பொருட்களைப் பற்றிய வாய்பாடு என்னும் சூழலில் எம் வாழ்முதலையும் எம்மையும் மறந்து காலச்சகடத்துடன் சுழன்று சுழன்று திரியவே நேரிடும். அவ்வாறு நேர்ந்தும் விட்டது.

பார்மின்கள்! நாங்கள் இன்பம் அநுபவிக்கும் இடங்கள் படக்காட்சி நிலையங்களாயின. நாங்கள் சங்கீதம் கேட்கும் இடங்கள் ஆகாயவசனி நிலையங்களாயின. நாங்கள் நனவிலும் கனவிலும் மின்னினும் நிலைமையில்லா மேற்படி

அதிசயங்களையே வாழ்த்துகிறோம். நாங்கள் எங்களுக்கென ஆண்டவனால் தரப்பட்ட சமயத்தில் முழுமுதல்ஞானிகளாய் இருந்த காலமெல்லாம் போய் எம்பெறற்கரும் வாழ்க்கையை மேனாட்டார்க்கு அர்ப்பணம் செய்து அவர்தம் நாட்டிற்றோன்றும் பற்பல அலைகளால் மோதுண்டு அலைகிறோம். அவ்வலைகளின் நடுவே அளவுபட்டு நின்று ஆடுகிறோம். ஆண்டவனே! நாம் அளவுபடாத நின் திருவடி நீழலில் அன்பாய் இன்பம் அநுபவிக்கும் அளவுபடாத வஸ்துக்கள் என்பதைக் காலப்பிழையினால் மறந்தேவிட்டோம். எங்கள் பிழையைப் பொருத்தருள்வீர். பொறுத்தருளி எம் நாட்டவருக்கு அன்றும் இன்றும் என்றும் உகந்தநெறி ஒன்றே என்றும், அந்த ஒரு நெறி சமயஞான நெறியே என்றும் பணித்தருள்வீர்.

சமயஞானம், தேசியஞானம் எனப்படுவனவெல்லாம் ஒருவன் தனது கடமையைச் சரிவர ஆற்றிவருவதனுள்ளே அடங்கும். ஒருவன் தன்பிறப்பை உணர்ந்து, தான்பிறந்த நாட்டைஉணர்ந்து, அந்நாட்டின் உயிர்நிலையத்தை உணர்ந்து, அதற்கேற்பக் கடமையைச்சரிவர ஆற்றிவரினன்றே அவன் வாழ்வு பெருவாழ்வாகும். பிறவிப் பெரும்பயனைத்தரும் மெய்வாழ்வாகும். ஒருவன் தன் கடமையை வகுக்குங்கால் அன்பைப்பெருக்கவும் ஆருயிரைக்காக்கவும் உதவி செய்யும் சமூக ஒழுங்குகளையும் ஏற்றுக்கொள்ளலாம். சமூகமென்பது ஆருயிரைக் காக்க ஏற்பட்டதொன்றாகலின், ஆருயிரொன்றை வளர்ப்பதே வாழ்க்கையின் முடிந்தலட்சியம். சமூகத்தை வளர்த்தலன்று. பார்மின்கள்! ஒருவன் இறைவன் முன்னிலையில் தானாகவே பிறக்கிறான்; தானாகவே நினைக்கிறான்; தானாகவே பேசுகிறான்; தானாகவே தொழிற்படுகிறான்; தானாகவே இன்புறுகிறான்; துன்புறுகிறான்; தானாகவே இறக்கிறான். ஆகலின் தன் வளர்ச்சிக்குத் தானே கர்த்தாவாகிறான்.

“ நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினு

மேன்மே லுயர்த்தி ருப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான் ''

என்பது பொய்யா மொழியன்றோ? அதனால் ஒருவன் நினைக்கும்வகையோ, செய்யும்திறனோ, வணங்கும்முறையோ இன்னொருவனுக்கு முடியாது. ஒருவன் இறைவனை அணுகும்முறை, அவனை நோக்கிச் செல்லும் வழி இன்னொருவனுக்கு அருவருப்பாகத் தோன்றும்.

தாமே தமக்குச் சுற்றமும், தாமே தமக்கு விதி வகையும் என்பது திருவாசகம். ஆகவே, நான் என்பது இறைவன் முன்னிலையில் மற்றவர்க்கு முழுவதும் வேறாய் இயங்கும் ஒரு தனிப்பட்ட வஸ்து என்று பெறப்படுகிறதல்லவா? படவே, தற்காலத்தில் மேனாட்டில் தோன்றி வீசும் அலைகள் மேற்படி உண்மையைமீறி வேறொன்றும் செய்யப் போவதில்லையென்று மறிகின்றோமல்லவா? ஒரு வேளை இந்த நவீன அலைகள் எம் சரித்திரத்தையும் வளர்ச்சியையும் சிறிது தடைசெய்து விடலாம்; ஆனால் நான் இறைவன் சந்நிதியிலியங்கும் ஒரு தனிப்பட்ட முதல் என்னும் உண்மையை மாற்றும் ஆற்றல் அவைதமக்கின்று. ஆகலின், அன்பர்களே! ஒரு பிழையுமில்லை. மேனாட்டில் தோன்றி வீசும் அலைகள் எம்சமயஞான முன்னிலையில் துவம்சமாய்ச் சூனியமாய் ஒழிவன.

ஆகலின், அவைதம்முள் அழுந்தாது இறைவன் திருக்குறிப்பின் வழிநின்று சமயப்பணிவிடை செய்வோம் வாரீர்! அதுவே எமக்குகந்தது; எம் இரத்தத்தில் ஓடுவது; பிறவி தோறும் எம்மைத் தொடர்ந்து வருவது; எம்பரம்பரையைச் சேர்ந்தது. எம் நாட்டைச் சேர்ந்தது; எம்மை வளர்த்து வருவது; எம்மை இப்பரந்த உலகில் உயர்ந்த மக்களாய் வைத்திருப்பது. ஆகலின் அந்தச் சமயப்பணிவிடையே செய்வோம் வாரீர்! இறைவன் திருக்குறிப்பைக் கடைப்பிடித்து வாரீர்; அன்பர்களே! எத்துணைமுயன்றாலும் இராசதந்திரத்தில் நாம் மிதக்கப்போவதில்லை; வியாபாரத்தில் முன்மாதிரி காட்டப்போவதுமில்லை. அன்றியும்

இவற்றில் முன்மாதிரி காட்டுவது எம்வாழ்வின் லட்சியமு மல்ல? எமது தேச சேவையோ கைத்தொழிலோ, விவசாய மோ, அரசியலோ சமயமொன்றையே அடிப்படையாய்க் கொண்டெழுவது. சமயப் பெரியாரையே தலைவராய்க் கொண்டியங்குவது. நமது ஆதிகால இந்தியநாடு தொடங்கி யது சமயத்தில், இடைக்கால இந்திய நாடு வளர்ந்து வருவது சமயத்தில், எதிர்கால இந்திய நாடு வளர்ந்து முறுகப் போவதும் சமயத்திற்றன். எம் நாட்டுச் சரித்திரத்தைப் பாரீர்கள். எம் நாட்டுத் தூண்டாமணி விளக்குகள் யார் என்று கவனியுங்கள். நெல்சன், நெப்போ லியன் போன்ற இராச தந்திரிகளன்று. அலெக்சாண்டர், கொன்சரன்ரீன் போன்ற அரச பெருமக்களன்று. சைவ வைஷ்ணவ, மாத்வ சமயப் பெரியார்களே எமது தூண்டா மணி விளக்குகள். அவர்தம் இயக்கங்களே எம் சரித்திரக் குறிப்புகள். அவர் தம்மையே நாம் பெரியாரென்று போற்று கிறோம். அவர் தம்மையே எம்மை வாழ்விக்கவந்த குருமணி கள் என்று கொண்டாடுகிறோம். அவர்தம் வாழ்வு தெய்வ நம்பிக்கையை அடிப்படையாய்க் கொண்டது. அந்த அவர் தம் நம்பிக்கையே எமக்கும் தெய்வ நம்பிக்கையைத் தந்து அல்லும் பகலும் ஆறுதலளிப்பது. அந்த நம்பிக்கையின் முன்னிலையி லல்லவோ நாம் மனத்திலே எண்ணிய எண் ணங்களும், பின்னிய பின்னல்களும் முடிந்த முடிச்சுகளும், ஒன்றன்பின் ஒன்றாய்ச் சூரியனைக்கண்ட பனிபோல் ஒழிந்து போகின்றன. போகவே, நாம் ஒருமுகமாய் ஆறுதலாய் இரக சியமாய் அநுபவிக்கு மின்பமல்லவோ உலக மெங்கும் தேடக்கிடையாத உண்மை இன்பம். "சஞ்சலப்படாதே - நம்பிக்கையா யிரு - ஒன்றியிருந்து நினை - காயத்துள்ளமு தூறும் - ஊற ஊற நீ காண வேண்டியதைக் கண்டு கொள்" என்று ஒன்றன்பின் ஒன்றாய் இடித்து இடித்துக் கூறிய எம் பண்டைப் பெருமக்களின் பொன் மொழிகள் எங்கே? நாங்கள் எங்கே? அவர் தம்மை மறக்கலாமா? அவர்தம் அடிச்சுவட்டைப் பாராத தொடாத வாழ்வுமொரு வாழ்வா?

அன்பர்களே! குமரி தொடங்கி இமயம் வரைக்கும் ரிஷிகள் வாழ்ந்த நாடு. அந்தப் பெரும் ரிஷி சமூகத்தின் அருள் நோக்கினாற்றான், இன்றும் நாங்கள் அஹிம்சையை மேற்கொண்டு இன்பமருந்த, பிற நாட்டவரெல்லாம் மிருக பலத்தை நம்பித் துன்புறுகின்றனர். அதனாற்றான் எத்தனையோ காலமெல்லாம் எத்தனையோ கொடுங்கோலாட்சிகளையும் எத்தனையோ பஞ்சங்களையும் அமைதியாய் ஆறுதலாய் அநுபவித்துவரும் சக்தியைப் பெறலானோம். அப்பெருமக்களுக் காட்பட்டமையாற்றான் பிறர்தமக்கில்லா ஒரு சகிப்புத்தன்மையும் எம்பால்அமைந்தது. எம்முத்தமப் பெரியாரின் திருவடி பட்டமையாற்றான் எம்நாடு புண்ணிய பூமியாய் ஊனமொன்றில்லாது விளங்குகிறது. எம்நாட்டில் யுத்தப்பேச்சு நிகழ்வதில்லை. யுத்தமேகம் கவிவதில்லை. இட்லர் பிறப்பதில்லை, மூஸலோனி தோன்றுவதில்லை. அன்பர்களே! ஐரோப்பாவில் உள்ள யுத்த நெருக்கடி எக்காலத்திலாயினும் எம்புண்ணிய நாட்டில் கால்வைக்க முடியுமா? எம்ரிஷிகள் சமூகம் வாளா இருந்துவிடுமா? அது எக்காலத்தும் விழிப்பாயிருக்கிறது. ஆத்மசக்தியின் பெருமையை வற்புறுத்திய வண்ணமாயிருக்கிறது.

ஆத்மசக்தி ஒன்றிலேயே நம்பிக்கை வைத்து தனிப்போக்காய் வளர்ந்துவரும் தேசம் நமது பாரத தேசமேயாம். அதனாலன்றோ மிகவும் பழமை வாய்ந்த எமது நாகரிகம் இன்றும் மிகவும் செழிப்புள்ளதாய் விளங்குகின்றது. ரோமர், கிரேக்கர் முதலியோர் பண்டைக் காலத்தில் நாகரிகம் வாய்ந்த மக்கள் என்று கூறப்படுகின்றனர். அத்தர்தம் நாகரிகம் ஒரு 800 ஆண்டுகள் தானும் நிலைத்திருக்கவில்லை. வெறும் லௌகிக விஷயங்களையே அடிப்படையாய்க் கொண்டு வளர்ந்த நாகரிகம் எவ்வாறு தான் நிலைத்திருக்கும்? தற்காலத்தில் எம்மையெல்லாம் மயக்கும் விஞ்ஞானச் செய்திகள் இவ்வுலகில் பரவி 200 ஆண்டுகள் தானும் ஆகவில்லை. மேற்படி விஞ்ஞான உண்மைகள் அசையத் தொடங்கி விட்டன. மேனாட்டு விஞ்ஞானிகளே, அவை தம்மை அசைத்து அசைத்து

அவை தம் பொய்ம்மையைப் புலப்படுத்துகின்றனர். எனவே, தற்கால விஞ்ஞான உலகம் இன்னும் ஒரு 50 ஆண்டுகளுக்காயினும் சுகமாய் நிலைத்திருக்கும் என்று நம்புவதற்கில்லை. உண்மை இவ்வாறிருக்க, சில நவீனர் " தற்கால விஞ்ஞான உலகம் எல்லாவசதிகளையும் தருகின்றது. தெய்வநம்பிக்கையென்பது இனிமேல் தேவையில்லை " என்று பிதற்றுவர்.

எங்கே! எங்கள் நகர கிராம பரிபாலனசபைகள் போக்குவரவு புரிய நல்ல வீதிகளையும், உண்டுகளிக்கச் சிறந்த உணவுகளையும், களியாட்டிடங்களையும், ஆகாயவசனி நிலையங்களையும் தந்து உதவுகின்றனவே. அமைதியாக இருந்து பார்ப்போம். ஒரு கணமாயினும் இருக்கமுடிகிறதா? எல்லா வசதிகளுமுள்ள செல்வர்களன்றோ அமைதியில்லாது சந்தியில் நின்று அழுபவர்கள். காணவேண்டுமாயின் அமெரிக்காவிற்குப் போமின்கள். அங்கே நிகழும் அளவிலடங்காத தற்கொலை நிகழ்ச்சிகளைக் கவனியுங்கள். அமைதியென்பதின்றிப் பணத்தில் மிதக்கும் செல்வர்களே இந்தத் தற்கொலைக்காரரென்று காண்பீர்கள். திருப்தியாக ஒரு கணமாயினும் இருக்கப் பழகாத அச்செல்வர்கள் வேறு என்னதான் செய்ய முடியும்? நம் நாட்டில் பல வசதிகளுமுள்ள செல்வர்கள் படும் பாடு நமக்குத் தெரியாமலில்லை. செல்வன் வீட்டுப்பிள்ளையே இராப்பகலாய் அழுத வண்ணமாயிருக்கிறது. அந்தப்பிள்ளையே காய்ந்து வறண்டுபோய்த் திருப்தியென்பதைக் கனவிலும் காணமுடியாது தவிக்கிறது. செல்வன் தன் மனைவியோ உலகம் முழுவதையும் விழுங்கி விட வேண்டும் என்று எண்ணங்கொண்டிருக்கிறாள். தன்னைப் போல் ஒரு பெண் ஜன்மம் இவ்வுலகிலுமில்லை; அவ்வுலகிலுமில்லை ; இக்காலத்திலுமில்லை ; அக்காலத்திலுமில்லை என்றும் நினைத்துவிடுகிறாள். அதனால் அமைதியைக்காணாது தவிக்கிறவளாகிறாள். சுருங்கக் கூறின், எல்லாவசதிகளுமுள்ள செல்வர்களுக்கு அமைதி இன்பத்தைக் காணும் வசதி மாத்திரம் இல்லாது போய்விடுகிறது.

ஆகலின், மேனாட்டிலிருந்து வசதிகளை வாங்கிப்பெருக்கி எத்துணை முயன்றாலும் நாம் பெறும் பயன் ஒன்றுமில்லை. தற்கால உலக வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத சிற்சில வசதிகளுடன் எம்முன்னோர்தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவர்தம் வாழ்வே எம் வாழ்வில் வெளிப்பட்டுத் தோன்றும்படி, எம் தந்தை தாயரின் உண்மைப் புதல்வர்களாய் அமைதியாய்ச் சுகமாய் இருக்கப்பழகுதல் வேண்டும். அதற்குத் தெய்வநம்பிக்கை ஒன்றே இன்றியமையாதது. அந்தத் தெய்வ நம்பிக்கையின் சிறப்பை எம்பண்டைப் பெருமக்களைப் போல், தென்னாட்டவர்க்கும் எந்நாட்டவர்க்கும் அறிவுறுத்தி, ஆண்டவனால் எமக்கெனத் தரப்பட்ட அந்தப்பணியை நாங்கள் அன்புடன் ஆற்றி வருவோமாக.

ஞான வாள் ஏந்தும்ஐயர் நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே.

—திருவாசகம்

ஞானமணிவிளக்கு

[திரு. இருக்கம்-ஆதிமூல முதலியார்]

(*Copy right*)

(மலர் - ௧௨, இதழ் - ௩, ௧௫0-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவனே தமக்கு உயிர்த் துணையென்பதை மறந்து, மனைவி, மக்கள், மாடு, வீடு என்பனவற்றில் மிகவும் மோகங்கொண்டழிதலை நினைந்து நினைந்து, "வளைபட் டகைமா தொடுமக் களெனுந் தளைபட் டழியத் தகுமோ தகுமோ" எனவும், "மட்டூர் குழல் மங்கையர் மையல்வலை பட்டுசெல்படும் பரிசென்றொழிவேன்" என்றும் சொல்லிச்சொல்லியேங்குவார்கள். இறைவனைக் கண்குளிரக்கண்டு ஆசைதீராமல் இன்னும் நன்றாய்த் தரிசித்து ஆனந்திக்க உடம்பெல்லாம் கண்ணாயிருக்க வேண்டுமென்பார்கள். "கண்ணாரக் கண்டேன் நானே" எனவும் "கண்டு கண்டுள்ளங்குளிர என் கண்குளிர்ந்தனவே" எனவும் "காணக் கண் அடியேன் பெற்றவாறே" என்றும் கூறிக்கூறி மகிழ்மீக் கூர்வார்கள். உள்ளம்உருகியுருகி, உடம்பெல்லாம்நெஞ்சாயிருந்துருகவேண்டுமென்பார்கள். "கல்லேனும் ஒரு காலத்திலுருகும் என் கன்னெஞ்ச முருகவில்லையே" எனவும், "திணியான மனோசிலை மீதுனதாள்—அணியாரரவிந்த மரும்புமதோ" எனவும் கூறி வருந்துவார்கள். இறைவன் அம்மையுமப்பனுமா யெழுந்தருளியிருக்கும் மணவாளக் கோலத்தைக் கண்டு, "பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே" யெனவும், "குவளைக்கண்ணி கூறன் காண்க, அவளுந்தானும் உடனே காண்க" எனவும் பாடிப்பாடிப் பல்லாண்டு கூறுவர். இறைவனுடைய அண்டத்தைப்போன்ற பெருமையையும், அணுவைப் போன்ற தம் சிறுமையையும், இறைவனை நோக்கத் தாம் சிறு புழுவைப்போலிருத்தலையும் எண்ணியெண்ணித் தம்மைக்கடைப்பட்ட நாயேன் எனவும், பாவியேனெனவும், பித்தனெனவும்இகழ்வார்கள். இவ்வாறு அன்பர்கள் தம்மை மறந்து பாடியும் ஆடியும் அலறியுங் கதறியும் அழுதும் தொழுதும், அன்பினிலக்கணம் அறியாத மூடர்கள் தம்மைப் பேயனெனவும் பித்தனெனவும்

இகழத் தாம் இறைவன் வழிபாடாகிய இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்திருப்பார்கள்.

கடவுளை வழிபடும் இடங்கள்

கடவுளை வழிபடும் இடங்கள் குரு லிங்கம் சங்கமம் என்னும் இம்மூன்றுமாம். தமக்குத் தீக்கையும் உபதேசமும் செய்த ஆசிரியனை மனிதனாக நினையாமல் கடவுளாகவே மதித்து வழிபடுதல் குரு வழிபாடாகும். தாம் அனுட்டிக்கும் சமயநெறிபற்றி யொழுகுவாரை அவர்கள் அணியுஞ் சின்னங்களையும் ஒழுக்கங்களையும் கண்டமாத்திரத்தில் அவர்களை மனிதராக எண்ணாமல் கடவுளாகவே மதித்து வணங்கல் சங்கம வழிபாடாகும். இதனை "எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி - யுவராதே அவரவரைக் கண்டபோ துகந்தடிமைத் திறநினைந் தங் குவந்துநோக்கி - இவர்தேவ ரவர்தேவர் என்றுசொல்லி யிரண்டாட்டா தொழிந்தீசன் திறமேபேணிக் - கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே" என்னுந் தேவாரத்தாலறிக. விக்கிரகங்களைக் கல் முதலியனவாக எண்ணாமல் கடவுளாகவே மதித்து வணங்கல் இலிங்க வழிபாடாகும்.

ஒருவன் மரத்திறைற் செய்த யானையின் உருவத்தைப் பார்த்து இது யானையோ குதிரையோ மாடோ வென்று ஆராய்ச்சி செய்யின், மரத்தோற்றம் இன்றி யானையின் தோற்றமே யுண்டாகும். இது மரமோ மண்ணோ செம்போ இரும்போ என ஆராயுங்கால், யானையின் தோற்றம் இன்றி மரத்தின் தோற்றமே முற்பட்டுநிற்கும். அதுபோல் விக்கிரகங்களிற் காணப்படும் தத்துவார்த்தங்களையும், இறைவன் அருட்டிரு வடிவங்களையும், திருவிளையாடல்களையுஞ் சிந்தித்து வழிபடுவார்க்கு அவை கல் முதலியனவாகத் தோன்

றுதலின்றிக் கடவுளாகவே காணப்படும். இதுவன்றியும், ஒரு பெண்ணின்மேல் மோகங்கொண்டு அவளைக் கூடி இன்புறும் ஒருவனுக்கு, அவள் சரீரம் மலம் மூத்திரம் இரத்தம் சீழ் சளி எச்சில் முதலிய அநுசிதப்பொருள்களின் மயமாயிருப்பது தோன்றுவதில்லை. அப்படியே கடவுளிடத்தில் மெய்யன்புபூண்டார்க்கும் விக்கிரகங்கள் கல் முதலியனவாகவிருப்பது தோன்றாது. தம் மனைவிமக்களிடத்தில் எவ்வளவு குற்றமிருந்தாலும் அவர்கள்மீது வைத்த பாசத்தால் அவர்கள் குற்றங்கள் தோன்றுவதில்லை. அப்படியே அடியவர்வேடம் பூண்டவரிடத்தும், விக்கிரகங்களிடத்தும் மெய்யன்பர்கள் குற்றங் காண மாட்டார்கள். ஆலயங்களிற் காணும் குற்றங்களை நோக்கி ஆலய வழிபாட்டை மெய்யன்பர்கள் கைவிடமாட்டார்கள்.

கடவுளை வழிபடும் மார்க்கங்கள்

கடவுளை வழிபடும் மார்க்கங்கள் சமயங்களெனவும் மதங்களெனவுஞ் சொல்லப்படும்.

நீர் ஒன்றே கடல் ஆறு குளம் கூவல் என்பனவாதியாய பல பெயர்களைப் பெற்றிருப்பதுபோல், கடவுள் ஒருவரே சமயங்கடோறும் வெவ்வேறு பெயர்களையும் வடிவங்களையும் பெற்றிருப்பர்.

பல நதிகள்போய் ஒரே வெளவத்தை யடைவதுபோல் பலவகைப்பட்ட சமயத்தினர் செய்யும் வழிபாடெல்லாம் முழுமுதற் கடவுள் ஒருவரையே சாரும்.

ஒரு பேரூருக்குச் செல்லும் வழிகள் அனைத்தும் ஒரே மாதிரியா யிராமல் பலதிறத்தனவா யிருப்பதுபோல், சமய நெறிகளும் மனிதர்களின் பக்குவங்களுக்கும், கன்ம வேறுபாடுகளுக்கும் அறிவாற்றல்களுக்கும் ஏற்றவாறு பல திறத்தனவா யிருக்கும்.

கடவுளை வழிபடும் மார்க்கம் வழிபடுவோர்களின் பக்குவங்களுக்கேற்பச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வகைப்படும்.

சரியையாவது இறைவன் ஆண்டவன் என்பதையும் தாம் அவனடிமையென்பதையும் சிந்தித்து, திருக்கோயிலில் அலகிடல், மெழுகல், மலர்கொய்து மாலைதொடுத்துக்கொடுத்தல், இறைவனைப் புகழ்ந்து பாடுதல், திருவிளக்கேற்றல், திருநந்தனவனம் வைத்துப் பாதுகாத்தல், அடியவர்களை வணங்கல், ஆலய வழிபாடு செய்தல் முதலியனவாம். இது தாச மார்க்கம் எனப்படும். இதனை,

"நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீயென்றும்
ஆரூரா வென்றென்றே யலறு நில்லே."

என்னுந் தேவாரத்தா லறிக.

கிரியையாவது, தூபம் தீபம் திருமஞ்சனம் திருவமுது முதலிய திரவியங்களைச் சேகரித்து, பூத சுத்தி ஆன்ம சுத்தி திரவிய சுத்தி மந்திர சுத்தி இலிங்க சுத்தி யெனப்படும் பஞ்ச சுத்திகளைச் செய்து, ஆசனம் பூசித்து, அதன் மேல் பூசிக்கும் மூர்த்தியை ஆவாகனஞ் செய்து, அபிடேக முதலியன செய்து, அன்பினால் அகங்குழைந்து தோத்திரஞ் செய்து வணங்குதலாம். இது புத்திர மார்க்கம் என்று சொல்லப்படும். இதனை,

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து

விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினு லிடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே"

என்னுந் தேவாரத்தாலும்,

"பஞ்சசுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே"

என்னுந் தாயுமான சுவாமிகள் திருப்பாட்டாலும் அறிக.

யோகமாவது பஞ்சேந்திரியங்களை யொடுக்கி, ரேசகம் பூரகம் என்னும் வாயுக்களைத் தடுத்துக் கும்பித்து, பிராண வாயுவைச் சுழுமுனையில் நிறுத்தித் தனது சரீரத்துள்ளே ஆறாதாரங்களை யறிந்து, மூலாதாரத்தில் அக்கினியைச் சொலிப்பித்து, நாபித்தானத்தில் குண்டலி சத்தி சொரூபமா யிருக்கும் அமுதத்தை யுருகப்பண்ணி, அமுததாரையை யுடல்முற்றும் நிறையச் செய்து, முழுச்சோதியான சிவத்தியானத்தி லமர்ந்து நிட்டைகூடி யிருத்தலாம். இத்தகைய யோகம் கைவரப் பெற்றவர்கள் அட்டமாசித்திகள் அடையப் பெறுவர். இது சகமார்க்கம் என்று சொல்லப்பட்டு யாவராலும் எளிதாய் அநுட்டிக்கப்படுவதன்று. இதனை,

"நியமலக்ஷணமும் இயமலக்ஷணமும் ஆசனாதி விதபேதமும்
நெடிதுணர்ந் திதயபத்ம பீடமிசை நின்றிலங்குமச பானலத்
தியலறிந்து வளர்மூல குண்டலியை யினிதிறைஞ்சியவ ளருளினால்
எல்லையற்றுவளர்சோதி மூலவனலெங்கள் மோனமனு முறையிலே
வயமிருந்து வருமமிர்த மண்டலமதிக்குளே மதியை வைத்து நான்
வாய்மடுத்தமிர்த வாரியைப் பருகி மன்னுமா ரமிர்த வடிவமாய்ச்
செயமிருந்துவரு சித்த யோகநிலை பெற்றுஞான நெறியடைவனோ
தெரிவதற்கரிய பிரமமே யமல சிற்சுகோதய விலாசமே."

என்னும் தாயுமான சுவாமிகள் திருவாக்கா லறிக.

ஞானமாவது, சரியை கிரியை யோகம் என்னும் இவைகளை விதிப்படி யனுட்டித்த புண்ணியத்தினாற் பரிபாக

மடைந்து, ஞான நூல்களை யோதி யுணர்ந்து, ஞானம் கைவரப்பெற்ற சீவன் முத்தர்களுக்குப் பணிபூண்டு, நித்தியா நித்திய வத்துவிவேகமடைந்து, இம்மை மறுமைப் பயன் களில் நிராசையுற்று, ஞானாசிரியன் திருநோக்காற் பாசநீக் கம் பெற்றுச் சிவமேதானாய் நிட்டைகூடி இருத்தலாம். இது சன்மார்க்கம் எனவுஞ் சொல்லப்படும்.

சரியையாளர்க்குச் சரியைமாத்திரமும் கிரியையாளர்க் குச் சரியையும் கிரியையும், யோகிகளுக்குச் சரியையும் கிரி யையும் யோகமும், ஞானிகளுக்கு இந்நான்கும் இன்றியமை யாதனவாம்.

சரியையின் முதிர்ச்சியில் கிரியையும், கிரியையின் முதிர்ச்சியில் யோகமும், யோகத்தின் முதிர்ச்சியில் ஞான மும் தாமே உண்டாம். இதனை "விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்பு மலர் காய் கனிபோலன்றோ பராபரமே" என்னுந் தாயுமான சுவாமிகள் திருவாக்கால் அறிக.

ஆணவமலம் சரியையில் காற்பாகமும், கிரியையில் அரைப்பாகமும், யோகத்தில் முக்காற்பாகமும், ஞானத்தில் முற்றிலும் ஒழியும்.

சரியையின் பலன் சாலோகமும், கிரியையின் பலன் சாமீபமும், யோகத்தின் பலன் சாரூபமும், ஞானத்தின் பலன் சாயுச்சியமுமாம்.

சரியையும் கிரியையும் அனுட்டித்தலால் சாலோகசாமீப பதவிகளைப் பெறுவோர் மீண்டும் பிறவியெடாமலே, சாரூப சாயுச்சிய பதவிகளைப் பெறுவர். ஆதலால் தாயுமான சுவாமி கள் "எனக்கினிச் சரியையாதிகள் போதும்" என்றருளிச் செய்தனர்.

கிரமப்பட்டுச் சரியை கிரியைகளை யனுட்டியாமல், இவை மூடர்களுக்கே யுரியனவென்று சொல்லிக்கொண்டு

ஞானம் கைவரவேண்டி ஞான நூல்களை யோதுவோர் சிர மப்பட்டு உழைத்துச் சீவியாமல், தனவந்தராக விரும்பி இரசவாதம் செய்து தம் கைப்பொருளை யிழந்திடர்ப்படு வாரை யொப்பர். இவர்கள் நாம் ஞான நூலாராய்ச்சிச்செய் கிறோம் என்று எண்ணி மகிழ்தல், சிறு பெண்கள் மணலாற் சிறு வீடுகட்டி மணற்சோற்றை யுண்டுமகிழ்வது போலாம். இதனை "சின்னஞ் சிறியார்கள் செய்த மணற்சோற்றை யொக்கும்—மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே" என் னும் தாயுமான சுவாமிகள் திருவாக்காலறிக.

சாலோகம் என்பது சிவலோகத்தில் இந்திராதி தேவர் கள் தமக்குப் பணிசெய்யுமாறு வாழ்தல். சாமீபம் என் பது சிவலோகத்தில் சிவபெருமானுக்கு அணியராய் வாழ் தல். சாரூபம் என்பது சிவபெருமானைப்போல் சரீரம் பெற்று வாழ்தல். சாயுச்சியம் என்பது சிவபெருமானுடன் இரண்டறக்கூடி யின்புற்று வாழ்தல்.

மெய்ஞ்ஞானம் கைவர விரும்புவோர் கீழ்வரும் தாயு மான சுவாமிகள் திருவாக்கைச் சிந்திக்கக்கடவர்.

1. பஞ்ச சுத்திசெய்து நின்னைப் பாவித்துப் பூசை செய்தால்-விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே.

2. அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட் டால் - இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

3. மூர்த்தி தலந்தீர்த்த முறையாற் றொடங் கினர்க் கோர்-வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

4. தானந்தவந் தருமஞ் சந்ததமுஞ் செய்வர் சிவ ஞானந்தனையணைய நல்லோர் பராபரமே.

மடாலயங்கள்

தமிழ்நாடெங்கும் சைவமடாலயங்களும் வைணவ மடா லயங்களும் உண்டு. இவைகளிற் சரியை கிரியா மார்க்கத்

தினரும் யோகிகளும், முத்தமிழ்வல்ல வித்தகப் புலவர்களும், முற்றத்துறந்த முனிவர்களும், வேதவேதாந்தங்களை யோதியுணர்ந்த பிராமணர்களும், ஆகமங்களை யோதியுணர்ந்த வேதியர்களும் குழுமியிருப்பார்கள். மடாதிபதிகள் தம் சீடர்களுக்கு அவரவர் பக்குவத்திற்கேற்பத் தீக்கைகளைச் செய்து அவர்கள் தத்தம் நெறியினின்றும் வழாதபடி பாதுகாப்பார்கள். தம் வசத்திலிருக்கும் ஆலயங்களில் ஆகமவிதி வழாமல் நித்தியம் நைமித்திகம் முதலிய பூசைகளை நியமமாக நடத்துவிப்பார்கள். கோயிற் சொத்துக்களையும் வருமானங்களையும் தம்முயிர்போற் பாதுகாப்பார்கள். சனங்கள் சமயநெறிவழா தொழுகுமாறு அவர்களுக்குச் சமயபோதனை செய்விப்பார்கள்.

மடங்களில் சிவயோகிகள் ஐம்புலனடக்கிச் சிவஞானம் சுடர்விட்டொளிரும் தங்கள் மனக்குகையில் இறைவனை யிருத்திப் பூசித்து இன்புற்றிருத்தல்; தம்மைப்போற் சடைமுடி தரித்தும், கல்லாடை புனைந்தும், உடம்பெல்லாம் வெண்ணீறு பூசியும், காமனை யெரித்தும், முற்றத்துறந்த முனிவன்போல் வேடம் பூண்டு, ஒரு பெண்ணின் முலைத்தழும்போடு வளைத்தழும்பையும் சரீரத்திற் கொண்டு, எங்கெங்கே போய்த் தேடிப் பார்த்தாலும் எவர்க்கும் அகப்படாமலும், சிலர்க்கு ஆணைப்போலவும், சிலர்க்குப் பெண்ணைப்போலவும் தன்னைக் காட்டிக்கொண்டும், எந்தக் கட்டுப்பாட்டுக்கும் சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்படாமல், தன்னை நம்புங் கள்ளமுங் கபடமுமற்ற அன்பர்களின் உடல் பொருளாவியைக் கவரும் கள்வனைக் கண்டுபிடித்து "சோரனைக் கண்டனம், ஆர்மின், ஆர்மின், நாண்மலர்ப் பிணையலில் தாள் தளையிடுமின், சுற்றுமின், சூழ்மின், தொடர்மின், விடேன்மின், பற்றுமின்" என்று சொல்லிக்கொண்டு போய் அக்கினி சுவாலித்

தெரியும் சிறைக்கூடத்திலடைத்து வைத்து மகிழ்வதுபோற் காணப்படும்.

ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு குடும்பத்தை யொக்கும். அரசரும் மடாதிபதிகளும் அக்குடும்பத்தின் தந்தையையும் தாயையும் ஒப்பர்.

நான்காம் பாகம்

இளையான்குடிமாற நாயனார் புராணம்

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கினுக்கும் உறைவிடமாகிய தமிழ்நாட்டின்கண், இளையான்குடியென்னுமொரு ஊரில், மாறனார் எனப் பெயரிய மாதவர் ஒருவர் இருந்தனர். அவர் வேளாண் குலத்திற் பிறந்து தாளாண்மையோடு வேளாண்மை புரிந்து, அருந்ததி போலுங் கற்பிற் சிறந்த மனையாட்டியுடன் அளகேசனையொத்து வாழ்ந்திருந்தனர். அவர் தாம் பெற்ற மானிடப் பிறவியாலுஞ் செல்வத்தாலும் அடையவேண்டிய பயனெல்லாம் சிவபெருமானுக்குஞ் சிவனடியார்களுக்குந் தொண்டு பூண்டொழுகுதலேயாம் என்பதையுணர்ந்து சிவவேடந்தரித்தவர்களைக் கண்டமாத்திரத்தில் தம்மை மறந்து சிவபெருமானே யவ்வாறெழுந்தருளினாரென்று அகமகிழ்ந்து முகமலர்ந்து எதிர்கொண்டணைந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி யுபசாரமொழிகளைக் கூறி, தம் வீட்டுக் கழைத்துச்சென்று அவர்கள் திருவடிகளைப் புனித நீரால் விளக்கி அந்நீரைத் தஞ்சிரசின் மேற்றெளித்துக் கொள்வர். அப்பாதோதகத்தை யுள்ளும் பருகி யுள்ளங்குளிர்வர். அவர்களுக்கு அறுசுவையோடுந் திருவமுதூட்டி எஞ்சிய பரிகலசேடத்தையுண்டு விண்ணவர் அமுதை வேம்பென வெறுப்பர்.

அவர் தினந்தோறும் பொழுது புலர்வதன் முன் நித்திரை விட்டெழுந்து நீராடச் செல்வர். நீராடுந் தடாகத்தை யடைந்து அதிலிடையிடையே பூத்திருக்குஞ் செந்தாமரை மலர்களாலும், நீலோற்பல மலர்களாலும், அதில் வசிக்குமாவங்களாலும், தம்முடல் மாசு நீங்க ஆட வரும் மகளிரும் மூழ்குதலாலும் அது அம்மையப்பரை யொத்திருத்தலை நோக்கியகங்குழைவர். அவ்வம்மையப்பரின் அருட்கடலிற்றிளைப்பவர் போல அவர்களைச் சிந்தித்துச் சிந்தித்துச் சீதப்புனலாடுவர். நீராடியபின் ஓதவொண்ணுக் காதலோடு பசுமலமகற்றும் பால் வெண்ணீறணிந்து சிவ பெருமான் திருக்கோயிலுட்சென்று விதிப்படி பிரதட்சிண நமஸ்காரங்கள் செய்து, தமது கைப்போது கொண்டு அப்போது கொய்த நறுமணங்கமழும் நாண்மலர்களால் அம்மையப்பருக்கு அருச்சனைகள் புரிவிப்பர். உள்ளம் உருகவும் உடல்குழையவும் கண்களில் ஆனந்தபாஷ்பம் பொழியவும் தோத்திரஞ் செய்வர்.

அவர் இவ்வாறு வெறும் அன்புகாரணமாகச் செய்து வந்த சிவபூசையாலுஞ் சிவனடியவர் பூசையாலும் நாளடைவில் அவருடைய ஐம்புலன்களும் அந்தக்கரணங்களும் புறக்கரணங்களும் சீவத்தன்மையினின்றும் நீங்கிச் சிவகரணங்களாகத் திரிவனவாயின. அகப்பற்றும் புறப்பற்றும் அவரை விட்டு நீங்கி அன்புருவாயிருக்கப் பெற்றனர். அதனால் சிவபெருமான் அவரை ஆட்கொள்ள வேண்டி அவருக்கு வறுமை நேரிடும்படிச் செய்தனர். அதனால் நாளடைவில் அவர் செல்வமெல்லாம் குறைந்து கொண்டேவர, அவர் தமது விளைநில முதலியவற்றோடு உண்கல முதலியவற்றையும் விற்றனர். கடைசியாகக் கடன்பட்டும் பிறருக்கேவல் செய்தும் பட்டினி கிடந்தும் சிவனடியார் பூசையைச் செய்தனர். பட்டினியால் சரீரம் வாடியும் சிவனடியார் முன் அவர்

முகம் வாடவில்லை. அவருடன் பழகியிருந்த சிநேகிதர்களும் சுற்றத்தவர்களும் அற்றகுளத்தி னறுநீர்ப் பறவைபோல் அவரைவிட்டு நீங்கிப் போனார்கள். அவர் சிவனடியாரிடத்தில் வைத்த அன்பு மாத்திரம் அவரைவிட்டு நீங்கவில்லை. அன்பர்பணி செய்தலையே அரும் பெருஞ்செல்வமென மதித்து "வானையும் பெறில் வேண்டேன் மண்ணுள் வான் மதித்துமிரேன்" என்று இறுமாந்திருக்கும் மெய்யன்பர்களைத் தரித்திரம் என் செய்யும்?

அவரிடத்திற் செல்வமிருந்தபோது சென்று கூடிக்குலாவியவர்களெல்லாம், அவரை யிகழத் தலைப்பட்டார்கள். அவர்கள் நாயனாரைப் பார்த்து "ஐயா மாறனாரே, நீர் தரித்திரம் பிடித்துத் திரியும் சிவனடியார் வேடதாரிகளைப் பூசித்துப் பூசித்து இவ்வளவு துர்ப்பாக்கியமான நிலைமையையடைந்தும் சிவனடியார் பைத்தியம் உம்மை விட்டு நீங்கவில்லையே! இரந்துண்ணுஞ் சிவனைப் பூசிப்பவர்கள் அச்சிவனைப்போலவே இரந்துண்பவராவரென்று நாங்கள் பலகாலுஞ் சொல்லியும் நீர் கேட்கவில்லையே! ஒருவன் எவ்வளவு நற்குண நற்செய்கைகளுடையவனாயிருப்பினும், அவனிடத்திற் பொருளில்லாவிட்டால், அவனை யில்லாளும் வேண்டாள்; ஈன்றெடுத்த தாய் வேண்டாள்; அவன் சொல் எவர் செவிக்கும் ஏறாது. வறுமை யென்னும் ஒரு துன்பமே பல துன்பங்களை யுண்டாக்கும். வறுமையுடையானுக்கு இம்மையின்பமுமில்லை, மறுமையின்பமுமில்லை. அவனை யெல்லாரும் இழிவாகப் பேசுவார்கள். பொருளுடையவன் பிறர்க்கீயாத உலோபியாயிருப்பினும் உலகினர் அவனைக் கொண்டாடுவார்கள். பொருளுடையான் மேன்மேலும் பொருளீட்டுதலும் எண்ணிய கருமங்களை யெளிதிற் செய்தலுங் கூடும்: பகைவரும் பொருளுடையானைக் கண்டஞ்சுவர். நீர், திரண்ட ஐசுவரியம் பெற்றிருந்தும் அதைச் சாம்பலைப்

பூசித் திரிபவர்க்கெல்லாம் கொடுத்துவிட்டு, இப்போது துன்புறுகின்றீர். ஐயோ, பாவம்" என்பார்கள்.

அவர்கள் அவ்வாறு கூறுவதைக் கேட்டு நாயனார் "ஐயன்மீர்! அருட்செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்-பூரியார் கண்ணுமுள" புலை கொலை களவு கட்காமம் என்னும் பஞ்சமாபாதகஞ் செய்வாரிடத்தும் பொருட்செல்வமிருத்தலைக் காணலாம். அருட்செல்வமோ, இரக்கம், ஈகை, அன்பு, பொறை, கடவுட்பத்தி முதலிய உயர்குணங்களுடைய பெரியோரிடத்தில் மாத்திரம் இருக்கும். அருட்செல்வமில்லாதாரிடத்துள்ள பொருட் செல்வத்தைக் காட்டிலும், அருட்செல்வமுடைய பெரியாரிடத்துள்ள வறுமையே நனிநன்று. தன்னிடத்து வந்து நச்சினார்க்கியாதான் செல்வமுடையவனாயிருத்தல் ஊர் நடுவில் எட்டிமரம் பழுத்தாற் போலும். மனிதர்கள் செல்வமுண்டானபோது செய்தற்கெளியன வென்று தீயகாரியங்களைச் செய்தல் கண்கூடு. நேற்றுச் செல்வராயிருந்தார் இன்று தரித்திராயிருத்தலையும், நேற்று வறியராயிருந்தார் இன்று செல்வராயிருத்தலையும் பார்க்கிறோம். கோடிகோடியாகச் செல்வத்தைக் குவித்து வைத்திருப்போரும் திருப்தியடையாது பொருளாசை மேலிட்டு மேலுமேலும் பொருளீட்டுதலிலேயே தங்கள் அறிவையும் காலத்தையும் செலுத்துகிறார்கள். 'செல்வமென்பது சிந்தையினிறைவே, அல்காநல்குரவு அவாவெனப்படும்' என்பர் மேலோர். கோடிகோடியாகப் பொருள் படைத்தோரும் இறக்கும்போது தம்மோடு ஒரு காசும் கொண்டுபோவதில்லை. ஆதலால் படி முழுதுமாளும் முடிமன்னர் செல்வத்தையும் கான்ற சோறென அருவருத்துத் தள்ளிய பெரியோர்கள் அன்பர் பணி செய்தலையே அரும்பெருஞ் செல்வமென்றொழுகுவர். இறைவன், இந்திரசாலம் போன்ற இவ்வுலக வாழ்க்கையையும் சொர்க்காதி போகங்

களையும் விரும்பித் தவஞ் செய்வோர்க்கு அப்பதவிகளையும், அவைகளைப் பொருளென மதியாது தமது திருவடிப் பற்றையே பெரும் பற்ருகப் பற்றி வாழும் அன்பர்களுக்கு இரந்துண்ணுதலாகிய அரும் பெருஞ் செல்வத்தையுந் தந்தருளுவன். ஆதலால் நீங்களும் உலக வாழ்வில் மையல் கொண்டழியாமல் என்னுடன் கூடிச் சிவனடியார் வழிபாடு செய்யுங்கள்'' என்பார்.

இவ்வாறு நாடவர் பழித்தலைப் பூணென மதித்து இவர் அவர்களைப் பழிக்கவும், அவர்கள் இவரைப் பழிக்கவும் வாழ்ந்து வரு நாளில், ஒருநாள் ஓயாமல் மழை பெய்து கொண்டிருந்தது. அதனுல் அவர் வெளியே போகக்கூடாமல் அன்று முழுவதும் அவரும் அவர் பத்தினியாரும் பட்டினியாயிருந்து சிவத்தியானமே உணவாகப் பள்ளிகொண்டார்கள். அப்போது நடுநிசியில் அன்பர்க்கு அறைகூவி வீடருளும் சிவபெருமான், சிவனடியவர் திருமேனி தாங்கி மழையால் முழுவதும் நனைந்து, சரீரமுழுவதும் திருவெண்ணீறணிந்து பசியின் கொடுமையால் வருந்துவார்போல் அவர் வீட்டுக் கதவைத் தட்டினர். அவ்வரவத்தைக் கேட்டு, நாயனர் விரைந்து சென்று கதவைத் திறந்தபோது தாம் எதிர்பாராமலே சிவனடியார் ஒருவர் தம்முன் னிருக்கக் கண்டு, தம்மை மறந்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, " அடியேன் உய்யுமாறு தேவரீர் இந்த நடுநிசியிலும் வரப்பெற்ற என் தவமே தவம்'' என்று கூறி வீட்டினுள்ளே அழைத்துச் சென்று, சச்சிதானந்த மயமாகிய அவர் திருமேனியிலிருந்த ஈரத்தைத் தாம் உடுத்திருந்த கந்தையாற்றுவட்டி, ஆசனமிட்டெழுந்தருளப்பண்ணி, தமது பத்தினியாரைப் பார்த்து " பெண்ணே, நாம் இன்று முழுவதும் பட்டினியாய்க் கிடக்கிறோம். இச்சமயம் நமக்குதவிசெய்வா ரொருவருமில்லை. எங்காவது போய் இரக்கலாமாவென்ருல், இப்போது பேயு

முறங்கும் நடுராத்திரியா யிருக்கிறது. மழை ஓயாமல் பெய்கிறது. எங்கும் வெள்ளக்காடா யிருக்கிறது. வந்திருக்குஞ் சிவனடியார் மிகவும் பசித்திருக்கிறார். இவர் பசியைப் பார்க்க என் மனம் சகிக்கமுடியாம லிருக்கிறது. நீ இதற்கேதேனு மொரு உபாயஞ் சொல்லவேண்டும்'' என்றனர். அம்மையார் நாயனாரை நோக்கி "நாயகரே, நமக்கு மனிதர் துணையில்லாவிடினும், தோன்றாத் துணையாகிய இறைவன் உளன். பஞ்சாக்கரமாகிய ஒப்பற்ற மந்திர வாளிருக்கிறது. திருவெண்ணீறாகிய கவசமிருக்கிறது. ஆதலால் நாம் எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை. தேவரீர் தாமதமின்றி நம் வயலுக்குப் போனால் அதில் நாம் நேற்று விதைத்த நென்மணிகள் முளைகொண்டு நீரில் மிதந்துகொண்டிருக்கும். அவைகளை வாரிக் கொண்டுவந்தால் பதப்படுத்திச் சோறாக்கி வந்திருக்கும் சிவனடியார்க் குண்பித்துப் பசியைத் தீர்க்கலாம்'' என்றனர். அதைக் கேட்டு நாயனார் அளவற்ற மகிழ்ச்சியடைந்து தமக்குச் சமயோசிதமான உபாயத்தைக் கூறிய தமது பத்தினியாரைப் புகழ்ந்து உடனே ஒரு இறைகூடையைத் தலையிற் கவிழ்த்துக்கொண்டு வயலைநோக்கிச் செல்வாராயினர். அச்சமயம் வழியெங்கும் வெள்ளக்காடாய், வறியர் செல்வராதலும், செல்வர் வறியராதலும்போல், பள்ளமெல்லாம் மேடாயும், மேடெல்லாம் பள்ளமாயுமிருந்தன. பெருங்காற்று சுழன்று சுழன்று வீசியது. எங்கும் ஒரே அந்தகாரமாயிருந்தது. மூச்சுவிடவுங்கூடாதபடி மழை அமோகமாய்ப் பெய்தது. இடி தலைமேல் விழுவதுபோல் இடித்தது. கண்கள் தெறிக்கும்படி மின்னல் மின்னியது. அவர் கால்களுக்குத் தளையிடுவதுபோல் பாம்புகள் நீரில் மிதந்துகொண்டிருந்தன. நரிகள் பசியால் வருந்தி இரையை யெதிர்பார்த்து ஊளையிட்டுக் கொண்டிருந்தன. நாயனார் உள்ளத்தில் எவ்விதத்திலாவது சிவனடியார் பசியைத் தீர்க்கவேண்டு மென்னுங் கவலை குடிகொண்டிருந்தமையால், அவருக்குச் சிறிதும் அச்சம் தோன்றவில்லை. "அச்சம் தாய் தலையன்பின் முன்பு நிற்குமோ!'' நாயனார் தமது கால்களால் தடவித் தடவிக் கொண்டே போய்க் குறிப்பாகத் தம் வயலையடைந்தனர்.

நாயனார் வீட்டைவிட்டுப் போயினபின், அவர் பத்தினியார் சிவனடியார்க்கு உணவளித்துப் பசி தீர்க்கக் காலந் தாழ்க்குமாகையால் அதற்கிடையில் அவர் பசியின்வேகத்தை யுபசார மொழிகளால் தணிக்குமாறு, அடிக்கடி யவரிடம் போய், தமது குமுதவாய் திறந்து அமுத மயமாகிய உபசார வார்த்தைகளைக் கூறிக்கொண் டிருந்தனர். அதற்கிசைய இறைவனாரும் அவ்வம்மையாரின் வதனசீத மதியைக்கண்டு செவ்வாம்பல்வாய் விண்டுதேன் துளிப்பதுபோல்புன்முறுவல் செய்து பேசிக்கொண்டிருந்தனர். அப்போது இறைவர் படுத்திருந்த பாயல் நாயனாரின் இதய தாமரைபோலிருந்தது. இறைவர் திருமேனி அத்தாமரையிலுள்ள தேனை யொத்திருந்தது. அவரை யடிக்கடிகண்டுகளித்த அம்மையாரின் கண்கள் அத்தேனையுண்டு களிக்குங் களிவண்டை யொத்தன. அன்றியும் அவர் படுத்திருந்தவிடம் அவர் ஆனந்தத்தாண்டவம் புரியும் கனகசபையேயாயிருந்தது. அவர் படுத்திருந்த பாயல் கனகசபையில் அவர் எழுந்தருளி யிருக்கும் அஞ்சக்கர ரூபமாகிய பதுமபீடமாயிருந்தது. ஓடுகள் விலகி ஆகாயம் தெரியுமாறிருந்த கூரை சிதாகாசமாயிருந்தது. அக்கூரையிலிருந்து சொட்டிக் கொண்டிருந்த மழைநீர் ஆறாகப் பெருகியோடியது நடராஜவள்ளலைத் தரிசிக்கும் அன்பர்களின் கண்களினின்றுஞ் சொரியும் ஆனந்த பாஷ்பம் அருவியாகப் பெருகியோடியதை யொத்திருந்தது.

சுந்தரமூர்த்தி நாயனார் தமக்குத் திருமுதுகுன்றர் தந்தருளிய பொன்னை மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்த் திருக்குளத்தில் சிரமப்பட்டுத் தேடியெடுத்துப் பரவையார் முகவாட்டந் தீரக்கொடுத்ததுபோல், நாயனார் நிலத்தில் விதைத்த பொன்னிறமுள்ள செந்நெல் முளைகளைச் சிரமப்பட்டு நீரினின்றும் வாரியெடுத்துக் கொண்டுபோய்த் தம் வரவை ஆவலோடெதிர் பார்த்துக்கொண்டிருந்த தம் பத்தினியார் முகவாட்டந்தீரக் கொடுத்தனர். அம்மையார் அவைகளைப்பெற்று அவற்றிலிருந்த சேறு நீங்கும்படி நன்றாய்க் கழுவிச் சுத்தஞ்செய்து, ஆம்பி பூத்துக் கோம்பி வசிக்குமாறிருந்த வடுக்களையைக் கோமயங்கொண்டு மெழுகி, மந்திர

விதியின் மரபுளிவழாத அந்தணர் தேவர்களுக்கு அவியுண ஊட்ட வேள்வித்தீ வளர்ப்பதுபோல், தீ மூட்டி, நென் முளைகளைப் பதமுற வறுத்து அரிசியாக்கி யுரலிலிட்டுக் குற்றி, உலையிலிட்டு அடிசிலாக்குவாராயினர். விறகில்லாமையால் நாயனார் மழையில் நனைந்து இடிந்து விழும்போலிருந்த தம் வீட்டுக்கூரை வலிச்சல்களை யொடித்துக் கொடுத்து, கறியமுதாக்குமாறு புறக்கடையில் முளைத்து இன்னுங்குழி நிரம்பாத கீரைப்பயிர்களைத் தம் பாசம் பறிப்பவர்போல் பறித்துக் கொடுத்தனர். அம்மையார் அவைகளைப் பெற்றுத் தம் சாமர்த்தியத்தால் வெவ்வேறு கறியமுதுகளாக்கி, இறைவனைத் துயிலுணர்த்தி யமுதுசெய்யுமாறு அழைக்கும்படி தமது கணவனாருக்குச் செப்பினர். நாயனார் இறைவரிடம் சென்று "எம்மையரே, காலந்தாழ்த்தமைக்கு மன்னித்துத் திருவமுதுண்ண எழுந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தலும், இறைவனார் திருவுருக்கரந்து எங்குஞ் சோதி மயமாயிருந்தனர். அதைக்கண்டு நாயனாரும் அவர் பத்தினியாரும் ஒன்றுந்தோன்றாமல் திகைத்து நின்றார்கள். இறைவனார் தருமவிடைமேல் உமாதேவியாருடன் தோன்றிக் காட்சிதந்தருள இருவரும் தம்மை மறந்து தோத்திரங்கள் செய்தார்கள். இறைவனார் அவர்களை நோக்கி, "மெய்யன்பர்களே, இந்திர சாலம்போன்ற இவ்வுலக வாழ்க்கை இனி உங்களுக்குத் தகாது. நீங்களிருவரும் தேவர்கள் உங்களிடம் குறையிரந்து பணிசெய்யுமாறு எம்முலகத்தில் வந்து வாழ்ந்திருங்கள்" என்றுகூறி மறைந்தருளினர். அதுமுதல் நாயனாரும் அவர் பத்தினியாரும் இன்றளவும் சிவலோகத்தில் வாழ்ந்தின்புறுவாராயினர். வாழ்க; வாழ்க. இவர்கள் சரித்திரத்தை வாசிப்பவர்களும் அன்பும் இன்புமடைந்து வாழ்வாராயினர்.